# மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

மலர் 6—இதழ் 22 ★ 29-9-57 சென்னை ★ விலை 16 காசு


# போர்க்கொடி உயர்ந்தது பாரீர்! புலி நிகர் மாந்தரே எழுவீர்!

—(0)—

## நாட்டு மொழி காக்க, நாடாளும் உரிமை பெற!

—(0)—

### திருவண்ணாமலை மாநாடுகள் தந்த எழுச்சி!

—(0)—

இரா. செழியன்

திருவண்ணாமலை!

பாடல் பெற்ற தலம், புராணங்கள் போற்றும் இடம், பலப் பலக் கதைகள் பெற்ற கோயில், பாவக்கறைபோக்கும்தீர்த்தங்கள், சித்தர்களும் ஜீவன் முக்தர்களும் பக்தர்களும் நாயன் மார்களும் தேடித் தேடி காண முயல்கிற கடவுள், மால் காணு பாதம், அயன் காணு சிரம், — சிவ மகா புராணங்களில் சிறப்புடன் பேசப்படுகிற அந்த புண்ணிய தலத்தில், இன்றும் கார்த்திகை தீபமென்றுல் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுவதைக் காணலாம்!

ஒரு வாரத்துக்கு முன்பு செப்டம்பர் 21, 22 தேதிகளில் திருவண்ணுமலையில் திரளான அளவில் மக்கள் கூடியிருந்தார்கள். அன்றைக்குக் கார்த்திகைத் தீபம் ஏற்றுகிற நாள் அல்ல! இருந்தாலும் அந்த இரண்டு நாட்களிலும் திருவண்ணுமலையில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடியிருந்தனர்!

கார்த்திகை தீபம் ஏற்றுகிற நாள் அல்ல! ஆனுல், ஏற்றப்பட்ட எழுச்சிக் கனலை—தாயகத்தை விடுவிக்கவேண்டுமென்ற விடுதலை தீபத்தை உள்ளத்தில் ஏற்றுக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அங்கு வந்தனர்! கார்த்திகை நாளில் வைக்கப்படும் ஒளி வரிசைகளைப் போல, வரிசை வரிசையாக உட்கார்ந்திருந்த அவர்களுடைய ஒளி முகங்கள் பிரகாசித்தன! ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு விளக்காக ஒளிவிட்டது. ஒவ்வொரு உள்ளமும், இந்த நாட்டைச் சூழ்ந்துள்ள இருளை-இழிவை-அறியாமையை-அடிமைத் தனத்தைப் போக்க உதவுகிற ஒளிச்சுடர்! அத்தகைய சுடர்களின் வரிசை திருவண்ணுமலையில், 21, 22 தேதிகளில் காணப்பட்டது.

திருவண்ணுமலையில் பக்தர்கள் புண்ணிய தினங்களில் கூடுவார்கள், பரமனைப் பாடுவார்கள், தீர்த்தங்களில் ஆடுவார்கள்! அவர்கள் ஆடுவதும், பாடுவதும் எல்லாம் இந்த இழி பிறப்பு நீங்கி முக்தி நிலை அடைய வேண்டுமென்பது தான்! திருவண்ணுமலையில் 21, 22 தேதிகளில் கூடியவர்கள் காலை நேரங்களில் பாடினுர்கள். பின் பகலெல்லாம் பேசினுர்கள், இரவில் நாடகமாடினுர்கள். இவ்வளவும் ஏன் செய்தார்களென்றுல், இழி பிறப்பு நீங்கி முக்தி நிலையடைய வேண்டுமெனப் பக்தர்கள் பாடுவதைப்போல், அவர்கள் இந்த நாட்டின் இழிநிலை நீங்கி, அடிமை நிலை நீங்கி, விடுதலை பெற, சுதந்தரம் என்ற முக்தி நிலையடைய வேண்டுமெனப் பாடினுர்கள். பேசினுர்கள்! பாடியவர்கள் தந்த கருத்துக்களைப் பற்றி மக்கள் பேசிக்கொண்டனர், பேசியவர்கள் தந்த கருத்துக்கள் இந்த நாட்டு மக்களின் இதய கீதமாகயிருந்தன! பாடல் பேச்சாயிற்று, பேச்சு பாடலாயிற்று!

21, 22 தேதிகளில் திருவண்ணுமலை விழாக்கோலம்கொண்டது வழியெங்கும் வாழைகள் நட்டிருந்தார்கள், தோரணங்களைக் கட்டியிருந்தார்கள், வேலைப்பாடான வளைவுகள் வரவேற்றன, இருவண்ணக் கொடிகள் "வருக, வருக" என அழைத்தன! வெட்ட வெளியில் அலங்காரக் கொட்டகை போட்டிருந்தார்கள், பாதையில்லாத இடத்தில் புதிதாகப் பாதையை அமைத்திருந்தார்கள். அவர்கள் நினைத்தால் என்ன தான் முடியாது, எது தான் நடைபெருது! அவர்களோ, புதிய பாதை அமைத்து, வெட்ட வெளியாய்ப் பாழ்பட்டுக் கிடக்கும் நாட்டில் அழகானதொரு புதிய அரசையே அமைக்கப் பாடுபடுபவர்கள்! அந்த நல்ல முயற்சி வெற்றி பெறும் என்பதைச் சிறு அளவில் திருவண்ணுமலை செய்து காட்டியது.

மாநில மாநாட்டுக்குப் பின், முதன் முதலாக திருவண்ணுமலையில் கழக மாநாடு கூடியது முதல் தடவையாகத் தேர்தலில் கழகம் ஈடுபட்டபொழுது,

## இந்திக்கு "அரோகரா!"



திருவண்ணுமலை மாநாட்டு ஊர்வலத்தில் ஒரு பகுதி.

தெருக்கள் நிறைந்து வழிய, இந்தி ஆதிக்க நினைவு அழிய, மக்கள் பேரொலி எழுப்பிச் செல்லும் காட்சி!


Best copy available.

# இந்தி வாடையை அண்ணா மலை தடுக்கும்!

தன் பகுதியில் நிறுத்தப்பட்ட கழக உறுப்பினர் எல்லோரையும் - இரண்டு சட்ட சபை உறுப்பினர்களையும்; ஒரு பாராளுமன்ற உறுப்பினரையும் திருவண்ணாமலைத்தொகுதி தேர்ந்தெடுத்தது! அவ்வாறு முழுவெற்றியைத் தந்து பெயர் பெற்ற திருவண்ணாமலையில் அதற்குப் பின் கழகம் முதல் தடவையாகக் கூடியது!

இரண்டு மகாநாடுகள் அங்கு கூடின. முதல் நாள் இந்தி எதிர்ப்பு மாநாடு, இரண்டாம் நாள் கழக மாநாடு! இரண்டும் தென்னாட்டைச் சூழ்ந்துள்ள இரு பேராபத்துகளை எதிர்த்து நிற்கக் கூட்டப்பட்டவைகளாகும்!

இந்தி மொழி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்க முதல் நாள் மாநாடு கூடியது!

வடநாட்டு அரசியல் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்க இரண்டாம் நாள் மாநாடு கூட்டப்பட்டது!

அரசியல் ஏகாதிபத்தியம், மொழி ஏகாதிபத்தியம் இரண்டும் தென்னாட்டின் மீது படையெடுத்துள்ளன! ஒரு ஏகாதிபத்தியம் மற்றொரு ஏகாதிபத்தியத்திற்குத் துணையாக வருகிறது. இந்த இரண்டு ஏகாதிபத்தியங்களையும் எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றால் தான், தென்னாட்டுக்கு எதிர்காலம் என்று ஏதாவது ஒன்று இருக்க முடியும். இரண்டு ஏகாதிபத்தியங்களாலும் தாக்கப்படும் நெருக்கடியான கட்டத்தை உணர்ந்து தான், திருவண்ணாமலையில் முதல் நாள் இந்தி எதிர்ப்பு மாநாடாகவும் இரண்டாம் நாள் கழக மாநாடாகவும் கூடின!

இரண்டு நாட்களும், பாசறையில் கூடிடும் போர் வீரர்களுக்கு விளக்குவதைப்போல, சூழ்ந்துள்ள ஆபத்தையும், எதிரிகள் செய்யும் சூழ்ச்சிகளையும், நாம் எதிர்த்து நிற்க வேண்டிய வகையைப் பற்றியும் கழகத் தோழர்களுக்குக் கருத்துரைகள் தரப்பட்டன. காவியுடையணிந்த சாமி அருணகிரிநாதர் பேசியதிலிருந்து தொடங்கி, காவியணியாத பல தோழர்கள் சொற்பொழிவுகள் ஆற்றிட, கடைசியாக அறிஞர் அண்ணா அவர்கள் அறிவுரை தரும் வரை, இரண்டு நாட்களும் சிறுடனும் சிறப்புடனும் மாநாடுகள் நடைபெற்றன.

சாமி அருணகிரிநாதர் தலைமை வகித்தது, மொழிக்கு ஆபத்து வந்தால் முற்றும் துறந்த முனிபுங்கவர்கள் கூட போராட்டத்துக்கு வந்து விடுவார்கள் என்பதைக் காட்டியது. "சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்றோர் பழமொழி உண்டு. சாதுக்களுக்குக் கோபம் வந்தால் எவ்வளவு கடுமையாகவும் ஆத்திரமாகவும் இருக்கும் என்பதைச் சாமி அருணகிரிநாதர் அவர்களின் பேச்சுக் காட்டியது. சாதுவாக, அமைதியாக, மெலிந்த பார்வையுடன், நலிந்த தோற்றத்துடன், மேடையில் அமர்ந்திருந்த அவர், தாய் மொழிக்கு வந்துள்ள ஆபத்தைப் பற்றிப் பேசத் தொடங்கியதும், தோற்றம் மாறியது, நலிந்த உடல் நிமிர்ந்து நின்றது, கனிவுடன் இருக்க வேண்டிய கண்களில் கோபக்கனல் வீசியது, அறம் பயிலும் குரலில் மறவனின் போர் முழக்கம் கேட்டது. "நான் துறவி மட்டுமல்ல, மறக்குடியில் பிறந்த வீரன்!" என அவர் எக்காளமிட்டார். "எனக்கு நீங்கள் அணிந்த மாலையை, பலி கடாவுக்கு அணியப்பட்ட மாலையாக நான் ஏற்றுக்கொள்கிறேன்! இந்தி எதிர்ப்புப் போராட்டக் களத்தில் முதற் பலியாக-பலி கடாவாக என்னை அர்ப்பணிக்கிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள்!" என்று அவர் கனிவுடன் கூறிய பொழுது, மாநாட்டில் கூடியிருந்தோர் கண்கள் கலங்கின, மறுகணம், "தமிழ்த் தாயே! உன் மக்கள் எங்கிருந்தாலும், கமண்டலம் தாங்கினாலும், கடல் கடந்தாலும், கட்சிகள் பல பிரித்தாலும், தோற்றத்தாலும், தொழிலாலும், கொடியாலும் கொள்கையாலும் வேற்றுமை பல இருந்த போதிலும், தாய் மொழிக்குத் தீங்கு என்றால் உடனே அவர்கள் அனைவரும் ஒன்றாகி விடுவார்கள்!" என்ற எண்ணம் தோன்றியது.

இந்தி எதிர்ப்பு மாநாட்டுக்குத் திறப்புரை ஆற்றியவர் காஞ்சி சி வி.எம். அண்ணாமலை! 1937இல் நடைபெற்ற முதல் போராட்டத்தில், கட்டாய இந்தியை எதிர்த்து நின்றவர்; 1957இல் கழகம் முதல் தடவையாக தேர்தலில் ஈடுபட்ட பொழுது கனம் பக்தவத்சலம் அவர்களை எதிர்த்து நின்றவர்! பல இலட்சங்களைச் செலவிடும் ஆற்றல் மிக்கவர் பக்தவத்சலம், பலமான இலட்சியம் ஒன்றை மட்டும் உறுதுணையாக வைத்துப் போராடியவர் நமது அண்ணாமலை! அந்த அண்ணாமலை தான் இந்த அண்ணாமலையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டைத் துவக்கி வைத்தார். மீண்டும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் துவக்கப் பட்டால், முன்னை விடப் பன்மடங்கு தீவிரமாக அது நடைபெறும் என்பதை சி. வி. எம். அண்ணாமலை தெரிவித்தார்.

பிற்பகல் நிகழ்ச்சியில் முதலாவதாகப் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் பேசினார். அவர் தமிழில் எம். ஏ. பட்டம் பெற்றவர், அது மட்டுமல்ல இந்திப் படிப்பில் உயர்ந்ததாக இருக்கும் "விசாரத்" பட்டத்தையும் பெற்றவர். தமிழும் இந்தியும் நன்கு கற்ற ஒருவர், தமிழகத்தில் இந்தி வருவதால் உண்டாகும் கேடுகளைப் பற்றிக் குறிப்பிடுவது வெறும் பேச்சாகத் தள்ளிவிட முடியாதது.

இந்தி எதிர்ப்பு மாநாட்டின் இறுதிக் கட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் பேச எழுந்தார். இந்தி ஆதிக்கத்துக்குத் தமிழ் நாட்டில் இறுதிக் கட்டத்தை அமைக்கும் பெரும் பொறுப்பைத் தாங்கியுள்ளவர் அவர்! நாட்டைக் காக்கு[ம்] அரண்களை அமைத்து; கோ[ட்]டையின் மேல் நின்று, பபை[டை]யெடுத்து வரும் எதிரிகளை[ப்] பார்வை யிடுவது போல[,] தென்னாட்டில் மிகப் பெரி[ய] எதிர்ப்புச் சக்தியைஉருவாக்கி[,] படையெடுத்து வரும் இந்[தி] ஏகாதிபத்தியத்தை ஏறிட்டு[ப்] பார்த்துப் பேசினார்! அண்[ணா] அவர்கள், அவரது கோட்டை[க]களில் ஒன்றான அண்ணாமலை[]யில் கூடிய வீரர்களிடம் பே[சி]னார்! "அண்ணாவின் மலை தா[ன்] அண்ணாமலையோ!" என[...] பிறர் கண்டு வியப்புறும் வ[ண்]ணம், கழக வளர்ச்சியிலு[ம்] தேர்தல் காலத்திலும் தி[ரு]வண்ணாமலை முன்னணியி[ல்] நின்றது! அத்தகைய அண்[ணா]மலையில், அண்ணா அவர்கள் இந்தி ஆதிக்கத்தைஎதிர்த்து[ப்] போர்ப்பரணி கொட்டினார்[.] டில்லி ஆதிக்கம் பிடிவாதமா[க] இருந்தால், பெரும் போ[ர்] மூளுவது நிச்சயம் என[] அண்ணா அவர்கள் எச்சரி[த்]தார்.

அண்ணா அவர்கள் வீண[ா]க ஒன்றைச் சொல்வதில்லை[;] சொன்னதை நிறைவேற்றும[ல்] இருந்ததில்லை!

அறிஞர் அண்ணா எச்சரி[க்]கை தருகிறாரென்றால், அதன் அளவையும் வலிவையும் நம்மைவிட ஆளவந்தார்கள் நன்றாக உணர்வார்கள்!

திருவண்ணாமலையி[ல்] அண்ணா அவர்கள் தந்த எ[ச்]சரிக்கை வீண் போகாது[!] இந்தி விரட்டப்படும், தமி[ழ்] காப்பாற்றப்படும் என்ற ந[ம்]பிக்கை உண்டாகிறது!

மறைமலையடிகளின் ஏழா[...] ஆண்டு நினைவு விழாவி[ல்] பேசிய டாக்டர் ரா. பி. சேது[ப்] பிள்ளை அவர்கள் "வடநாட்[டு] வாடை தமிழ்நாட்டில் புகாவண்ண[ம்] வேங்கடமலை தடுத்தது, தணிவ[...] மலை தடுத்தது." அவற்றையுங்கடந்[து] உள்ளே நுழைந்த வாடையை 'மறை[] மலை' தடுத்தது என்று கூறினார்.

இப்பொழுது இந்தி வாடை மீண்[]டும் வீசத் தொடங்குகிறது. அதை[த்] தடுக்க அண்ணாமலை—திருவண்ணாம[லை] எழுந்து நிற்கிறது. திருவண்ணா[]மலையில் கூடிய எண்ணற்[ற] வீரர்கள் தயாராக எழுந்[து] அணிவகுப்பில் நிற்கின்றனர்[.] "ஏமாந்த காலத்தில் ஏற்[ற]கொண்டோர் புலிவேடமிட்[டு] நம்மை இகழ்வதா?" என[ப்] புலிநிகர் மாந்தர் வழி வழி வ[ந்]தோர் சூளுரைத்து புறப்பட்[டு] விட்டனர். "தொகை உட[ம்]பில் உடம்பொன்று போக[...] சொந்த நாடு சுகம் பெற்[று] வாழ!" எனத் தமது உயிரை[ப்] பணயம் வைத்துப் போராட[...] செந்தமிழ்நாட்டு வீரர்கள் பல[ர்] புறப்பட்டு விட்டனர். எதே[ச்]சாதிகாரிகளின் ஆணவத்தை[...]

(12-ம் பக்கம் பார்க்க)

## அக்டோபர் 13
## இந்தி எதிர்ப்பு நாள்.

**இந்தி ஏகாதிபத்தியத்துக்குத் தமிழர்கள் காட்டும் எதிர்ப்பை டில்லி ஆட்சிபீடம் அறியச்செய்வீர்!**

**ஊர்வலங்கள் நடத்துக!**
**எதிர்ப்பொலி கிளப்புக!**

**தமிழர்களே எழுவீர்!**
**தாய்மொழியைக் காப்பீர்!**

**மக்கள் குரலை மக்கள் சபையினர் அறியட்டும்!**

மன்றம்

ஞாயிறு 29—9—57 சென்னை

# முதுகுளம்

"ஆயிரம் உண்டிங்கு சாதி, எனில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி!" எனக் காங்கிரசுக்காரர்கள் அந்த நாட்களில் முழங்கினார்கள். நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெரியதொரு இயக்கம், அந்நியர் ஆதிக்கத்தை அகற்றுவதில் தன் முழுக்கவனத்தையும் செலுத்தியிருந்த காரணத்தால், நாட்டைப் பிளவுபடுத்தும் நானாவிதமான சாதிப்பிரிவுகளைப்பற்றியும் வகுப்புவேற்றுமைகளைப் பற்றியும் அந்தக்காலத்தில் அதிகமாகக் கவலைப்படவில்லை.

இன்று, புகுந்த அந்நியன் வெளியேறி பத்தாண்டுக் காலமாகிறது. ஆனால் சாதிப் பிணக்குகளும் வகுப்பு வெறியும் இன்னும் இருக்கின்றன; முன்பிருந்ததைவிடப் பல மடங்கு அதிகமாக அவை வளர்ந்துள்ளன.

"ஆயிரம் உண்டிங்கு சாதி, எனில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி!" என்று பாரதியார் பாடியபொழுது, சாதிப் பாகுபாடுகள் நாட்டுக்குச் செய்யும் பெருங் கேடுகளைப்பற்றி அவருக்குத் தெரியாமலில்லை; நன்றாகத் தெரிந்திருந்தது. "சாதிகள் இல்லையடி பாப்பா!" எனச் சிறு குழந்தைகளுக்கே கைதட்டிச் சொல்லிக்கொடுத்தவர் அவர். பிறப்பின் காரணமாகக் காட்டப்படும் பேதங்களை அவர் வெறுத்தார், வகுப்பு வேற்றுமைகள் அழியவேண்டும் என்பதில் மற்றெவருக்கும் தாழா வகையில் அவர் பாடினார். ஆனால், சாதிப் பாகுபாடுகளைக்காட்டி மற்றொரு ஆதிக்கம் இந்த நாட்டை ஆளுவது கூடாது என அவர் கூறினார். சாதிகள் இருப்பது சரியா என்றால், இல்லை, தவறானது தீதானது என்று பாரதியார் துளியும் ஐயத்திற்கு இடமின்றி பல இடங்களில் பாடியுள்ளார். ஆனால் ஒரு தீங்கு மற்றொரு தீங்குக்குக் காரணமாகக் காட்டக் கூடாது என்பது அவர் கொள்கை!

சாதிப் பாகுபாடுகள்பற்றிய கேள்விகளைப் பின் கவனித்துக்கொள்ளலாம் எனப் போராடிய காங்கிரசு, அந்நியர் ஆதிக்கம் வெளியேறியபின், இரண்டாவது வேலையாக சாதி வேற்றுமைகளை இந்த நாட்டைவிட்டு வெளியேற்றப் பாடுபட்டிருக்கவேண்டும். ஆனால் இரண்டாவது கட்டத்தில் காங்கிரசுத் தவறிவிட்டது என்றுதான் கூறவேண்டியிருக்கிறது. விடுதலை பெற்ற இந்திய துணைக்கண்டத்தில், பெரும் மாறுதல்களைச்செய்யக்கூடிய வலிவையும் வசதியையும் மக்களின் நம்பிக்கையையும் காங்கிரசு பெற்றிருந்தது. ஆனால் பதவியில் அமர்ந்த காங்கிரசுக்காரர்கள், பதவியை பிடித்து வைத்துக்கொள்ளவும் தேர்தல்களில் வெற்றிகாணவும் சாதிப் பிளவுகளைப் பயன்படுத்தத் தலைப்பட்டனர். பல இடங்களில், சாதிகளின் காரணமாக ஏற்பட்டிருந்த செல்வாக்கைக் காங்கிரசு தனக்குச் சாதகமாக ஆக்கிக் கொண்டது. பணம், சாதி இரண்டையும் காங்கிரசு உதவியாகப் பெற்று, ஆட்சி நடத்த முற்பட்டது.

காங்கிரசு இயக்கம் காட்டிய அக்கரையற்ற தன்மையும், காங்கிரசுக்காரர்கள் வளர்த்துவிட்ட சாதிப் பிரிவுகளும், இன்று வகுப்புக் கலவரங்களாக எதிரொலிக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் பகுதியில் வகுப்புக் கலவரங்கள் தோன்றி ஏராளமான உயிர்ச்சேதத்தையும் பொருட்சேதத்தையும் உண்டாக்கியுள்ளன.

முதுகுளத்தூர், பரமக்குடி, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய வட்டாரங்களைச் சார்ந்த சிற்றூர்களில் மூண்டுள்ள வகுப்புக் கலவரங்கள் பற்றிய செய்திகளைக் கேட்கும் பொழுது, நாம் எந்தக் காலத்தில் இருக்கிறோம் என்ற திகைப்பு ஏற்படுகிறது. கொலை, கொள்ளை, பொருட்சேதம், உயிர்ப்பலிகள், துப்பாக்கிப் பிரயோகங்கள், பழிக்குப் பழி என இருதரப்பிலும் தூவப்படும் கொடுஞ்செயல்கள், நெஞ்சைத் திடுக்கிட வைப்பதாக உள்ளன. அமைதியற்று, ஆதரவற்று, பயங்கரச் சூழ்நிலைகளால் விரட்டப்பட்டு, இருதரப்பிலும் பல நூறு குடும்பங்கள் தத்தம் ஊர்களை விட்டு ஓடிடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. புகை சிறிது சிறிதாக மூண்ட நேரத்திலேயே, முன்கூட்டி தக்க நடவடிக்கைகளை நேர்மையான முறையில் எடுத்திருந்தால், இந்தப் பெரும் கலவரங்களை அரசாங்கம் தடுத்திருக்க முடியும். ஆனால் அந்த வகையில் அரசாங்கம் தவறிவிட்டது என்றே கூறவேண்டும். பின்பு கலவரங்களை அமைதிப்படுத்த அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள், கொந்தளிப்பைக் கொழுந்துவிட்டெரியச் செய்துவிட்டன. அந்தக் கொந்தளிப்பில், உயிர்கள் பலிகொள்ளப்படுதலும், வீடுகள் சூறையாடப்படுதலும், துப்பாக்கி மூனைகள் நீட்டப்படுதலும், வெட்டுக்காயங்களால் இறப்பவர்களும், வேட்டுக் காயங்களால் மாள்பவர்களும், இவ்வாறு மனித உயிர் துச்சமாக மதிக்கப்படும் நிலைக்கு முதுகுளத்தூர், பரமக்குடி, இராமநாதபுரம், சிவகங்கை பகுதிகள் ஆகிவிட்டன. அரசாங்கம் செயலற்ற நிலையில் இருக்கிறது. இந்தக் கலவரம் எந்த அளவு விரிவடையுமோ என்ற அச்சம் பரவி வருகிறது.

பிறப்பின் காரணமாக வேற்றுமைகள் கற்பிக்கப்படுவதும், பின் அந்த வேற்றுமைகளை அதிகப்படுத்தி வெறுப்புணர்ச்சிகளை வளர்ப்பதும் கூடாதென்பதை, நமது இயக்கம் அதிகமான அளவுக்குச் சொல்லியும் அதற்காக நீண்ட காலமாகப் பாடுபட்டும் வருகிறது. இப்பொழுது கலவரத்தை அடக்கி, அமைதியை நிலைநாட்ட எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் தத்தம் கட்சிச் சார்பான ஒத்துழைப்பைத்தர முன்வந்துள்ளனர். முன் வைக்கப்பட்டுள்ள ஒத்துழைப்பை அரசாங்கம் ஏற்று, அமைதி காணவேண்டும். எரிகிற தீயில் எண்ணெய் வார்ப்பதுபோல, நிலவுகிற கொந்தளிப்பை மேலும் அதிகமாக்கும் வகையில், அவசர அடக்குமுறை நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபடாதிருக்கவேண்டும். இரு வகுப்பினருக்கும் நம்பிக்கையையும், பாதுகாப்பையும் தரும் விதத்தில் அரசாங்கம் முதற்கண் நடக்கவேண்டும். அரசாங்கத்திடம் நம்பிக்கையற்ற இடத்தில், சட்டத்தின் ஆட்சி மங்கி அமைதி கெட்டுப்போகிறது, பாதுகாப்பை இழந்தபின் பயம் சூழ்கிறது; இரண்டினாலும் வாழ்க்கை நிலையற்றதாக ஒருவகை ஆவேசம் பிறந்துவிடுகிறது. அவ்வாறு நிலையற்ற வாழ்க்கையில் ஆயிரக்கணக்கான மக்கள் இன்று முதுகுளத்தூரில் வதைபடுகின்றனர். இந்த நிலையற்ற தன்மையைப் போக்கி, நம்பிக்கையை உண்டாக்க, பொது மக்களும் அரசியல் தலைவர்களும் தரும் ஒத்துழைப்பை அரசாங்கம் ஏற்று, அவர்கள் தரும் ஆலோசனைகளுக்கு மதிப்பளித்து, செயல்படுமாறு அரசாங்கத்தை நாம் வற்புறுத்துகிறோம். இதில் அரசியல் வேறுபாடோ, ஆளுங்கட்சி - எதிர்க்கட்சி என்ற பாகுபாடோ கருதாமல், விரைவில் அமைதி காண, அரசாங்கம் முன்வருமாக!

**மன்றம் வார இதழின் சந்தா விபரம்**

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

| | | | |
|---|---|---|---|
| இரண்டாண்டு | ... | ரூ. | 15·00 |
| ஓராண்டு | ... | ரூ. | 8·00 |
| ஆறுமாதம் | ... | ரூ. | 4·00 |
| தனி இதழ் | ... | | 16 காசு |

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

| | | | |
|---|---|---|---|
| இரண்டாண்டு | ... | ரூ. | 18·75 |
| ஓராண்டு | ... | ரூ. | 10·00 |

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

| | | |
|---|---|---|
| தனி இதழ் | ... | 20 காசு |




**வினா: தி. மு. கழகக் கொடியின் தத்துவம் என்ன?**

**விளக்கம்:** தி. மு. கழகக் கொடியின் குறிக்கோள் "புரட்சி ஓங்குக! இழிவு ஒழிக!" என்ற கருத்தை உணர்த்தி நிற்பதாகும்.

தி. மு. கழகக் கொடி மேல் சரி பாதி கறுப்பு நிறமாகவும், கீழ்ச் சரி பாதி சிவப்பு நிறமாகவும காட்சியளிப்பதைக் காணலாம். கறுப்பு இழிவை உணர்த்தும் நிறமாகவும், சிவப்பு புரட்சியை உணர்த்தும் நிறமாகவும் கொள்ளப்பட்டிருக்கின்றன. பொதுவாக உலக மரபை எடுத்துக் கொண்டால் உயர்ந்தோர்கள் இழிவு-இழி நிலை-தாழ்வு ஆகியவற்றைக் குறிக்கும் நிறமாகக் கறுப்பையும்,மாறுதல்-மலர்ச்சி-உயர்ச்சி-புரட்சி ஆகியவற்றைக் குறிக்கும் நிறமாகச் சிவப்பையும் கொண்டுள்ளனர். இயற்கை அமைப்பில் நின்று பார்த்தாலும் இருளின் நிறம் கறுப்பு; சுடரின் நிறம் சிவப்பு. இருட்டைத் தாழ்வு-இழிவு-பிற்போக்கு - அறியாமை போன்றவற்றை உணர்த்தும் ஒன்றாக உலகோர் கொண்டிருக்கின்றனர். சிவப்பை ஒளி-உயர்வு-சிறப்பு-புரட்சி - அறிவுடைமை போன்றவற்றை உணர்த்தும் ஒன்றாகக் கொண்டிருக்கின்றனர். எனவேதான் இயற்கை நியதிப்படியும், அறிவியல் முறையை ஒட்டியும், உலக மரபைக் கொண்டும் இழிவை உணர்த்த கறுப்பு நிறத்தையும், புரட்சியை உணர்த்த சிவப்பு நிறத்தையும் கொடியில் பொறித்துக் கொண்டது தி. மு. கழகம்.

திராவிடத்தின் அரசியல்-பொருளியல் - சமூகவியல் ஆகிய துறைகளிலே படிந்து கிடக்கும் இழி நிலை-இழிவு ஒழிய வேண்டும், அந்தத் துறைகளிலே புரட்சி - நல்ல மாறுதல் ஏற்பட வேண்டும் என்பதை உணர்த்துவதே கொடியின் குறிக்கோளாகும்.

ஒளி வீசும் செங்கதிரோன் எழ எழ, உலகைச் சூழ்ந்து கிடக்கும் இருள் எப்படி மெல்ல மெல்ல நீங்குகிறதோ, அப்படியே எல்லாத் துறைகளிலும் ஏற்றத்துக்குக் காரணமான புரட்சி ஏற்படவேண்டும், தாழ்நிலைக்குக் காரணமான இழிவு நீக்கப்பட வேண்டும் என்ற கருத்தைத் தி. மு. கழகத்தின் இரு வண்ணக் கொடி உணர்த்தி நிற்கிறது. எனவே தான் நீக்கப்பட வேண்டியது என்பதை உணர்த்தும் இழிவை-இருளை-கறுப்பை மேல்பாதியாக வைத்தும், வளர்க்கப்பட வேண்டியது என்பதை உணர்த்தும் மாறுதலை-புரட்சியை-சிவப்பை கீழ்ப் பாதியாக வைத்தும் தி. மு. கழகக் கொடி ஆக்கப் பட்டது.

கழகக் கொடியைப் பொறுத்து எழுப்பப் படும் ஒலி முழக்கம், முதலில் குறிப்பிட்டது போல், "புரட்சி ஓங்குக! இழிவு ஒழிக!" என்பதாகும்.

* * *

**வினா: திராவிட முன்னேற்றக் கழகம் தனி அமைப்பாகத் தோன்றுவதற்குப் பெரியாரின் திருமணந்தான் காரணமா? திருமணம் என்பது தனிப்பட்ட ஒருவரின் விருப்பை ஒட்டிய நடவடிக்கையாக இருக்கும் போது, அதனைப் பொதுத் துறையோடு பிணைத்து, அதனைக் காரணங் காட்டித் தனி அமைப்பு ஏற்படுத்திக் கொள்வது பொருந்துமா?**

**விளக்கம்:** திராவிடமுன்னேற்றக் கழகம் தனி அமைப்பாகத் தோன்றுவதற்குக் காரணம் 'பெரியாரின் திருமணம்', அல்ல 'பெரியாரால் ஏற்படுத்தித் தரப்பட்ட வாய்ப்புதான் 'பெரியாரின் திருமணமே' ஒழிய, அந்தத் 'திருமணமே' முழுமுதற் காரணமாக அமைந்து விடவில்லை.

திருமணம் என்பது தனிப்பட்ட ஒருவரின் விருப்பை ஒட்டிய நடவடிக்கையாகும் என்று வினா வெழுப்பிய நண்பர் குறிப்பிட்டுள்ளார். அந்தக் கருத்தை நாம் மறுக்கவோ, மறைக்கவோ மறக்கவோ இல்லை. அதைத் தான் நாமும் வற்புறுத்துகிறோம். தனிப்பட்டவரின் விருப்பை ஒட்டிய நடவடிக்கையைப் பொதுத் துறையோடு பிணைப்பது தவறு என்னும் கருத்துப் படவும் நண்பர் குறிப்பிட்டுள்ளார். அதையும் நாம் மறுக்க வில்லை. "காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" என்ற முறைப்படி அமைந்தது தான் 'பெரியாரின் திருமணம்' என்றால், அதன் குறுக்கே நிற்க விரும்பியிருக்க மாட்டோம்; மேலும் பெரிய - தொரு வாழ்த்து மடல் கூடப் படித்தளித்திருப்போம்; பெரியாருக்கு இணையான மணாளர் அவனியில் எங்கணுமே காண இயலாது என்று கூடப் போற்றிப் பாராட்டி யிருப்போம். ஆனால் உண்மையைப் பார்க்கப் போனால், தாம் செய்து கொண்டது 'திருமணம்' அல்ல "திருமணம் என்ற பெயரால் ஒரு ஏற்பாடு" என்று தான் பெரியார் அவர்கள் "விடுதலை" இதழில் எழுதினார்கள், எனவே பெரியார் அவர்கள் செய்து கொண்டது பொதுவாக உலகோர் கருதும் படியான ஒரு திருமணம் அல்ல என்பதும், திருமணம் என்ற பெயரால் ஒரு 'ஏற்பாடு' தான் செய்து கொண்டார் என்பதும் அவரது கூற்றிலிருந்தே பெறப்படுகின்றன.

திருமணம் என்று சொல்லப்படும் அந்த ஏற்பாடு அவரது தனிப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றாக இருக்குமேயானால், அப்பொழுதும் நாம் குறுக்கே நிற்க விரும்பியிருக்க மாட்டோம். அந்த ஏற்பாடு இயக்கத்தைப் பொறுத்த ஒரு ஏற்பாடாக அமைந்த ஏற்பாட்டைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய இன்றியமையாமை எமக்கு ஏற்பட்டது.

இயக்கத்திற்கும், இயக்கச் சொத்துக்களுக்கும் தமக்குப் பிறகு, தமது நம்பிக்கைக்கு உரியவரான மணியம்மையார் அவர்களை வாரிசாக ஏற்படுத்தும் ஏற்பாடு தான், தாம் திருமணம் என்ற பெயரால் செய்து கொள்ளும் நடவடிக்கையாகும் என்பதைப் பெரியார் அவர்களே தம் அறிக்கையில் அப்பொழுது குறிப்பிட்டிருந்தார்கள். பெரியாரின் அந்தத் 'திருமண ஏற்பாடு' அவரது தனிப்பட்ட நடவடிக்கையாக அமையாமல், இயக்கத்தோடு பிணைத்து வைக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாகத் தான் அமைந்திருந்தது என்பதை வினா வெழுப்பிய நண்பர் உணர்ந்து கொள்ளவேண்டும். தனிப்பட்டிருக்க வேண்டிய நடவடிக்கையையும், இயக்கத்தையும் ஒன்றாகப் பிணைத்து மக்களாட்சிப் (சனநாயகப்) பண்பிற்குத் தீங்கு விளைத்தவர் பெரியாரே யல்லாமல், தி. மு. கழகத்தைச் சார்ந்திருப்பவர்களல்லர்.

பண்டைக் காட்டு அரசர்கள் போல், குறுநில மன்னர்கள் போல், சமீன்தார்கள் போல், மடாதிபதிகள் போல், இயக்கத்திற்கு இயக்கத்தின் தலைவர் தம் விருப்பம் போல் தலைமை வாரிசுத் தேடுவது மக்களாட்சிப் பண்பிற்கு முரண்பட்ட ஒரு செயலாகும் என்று இயக்கத்திலிருந்த நல்லறிவு படைத்த பெரும்பாலோர் கருதினார்கள். இயக்கத்தின் தலைவராய், இயக்கத்திலிருக்கும் உறுப்பினர்கள் சேர்ந்து மக்களாட்சி முறைப்படி ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமே ஒழிய, வாரிசு முறையில் தேர்ந்தெடுக்கக் கூடாது என்று நல்லவர்கள் பலரும் எண்ணினர். அத்தகையோர், பெரியாரிடத்தில், திருமணம் என்ற பெயரால் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டாம் என்றும், மக்களாட்சிப் பண்பைப் புறக்கணிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்கள். மேலும், "வாரிசு என்பது மூட நம்பிக்கை" என்றும், "காதலுக்காக அல்லாமல் ஏற்பாட்டிற்காகத் திருமணம் செய்து கொள்வது பொருந்தாத் திருமணம்" என்றும் எந்தப் பெரியார் முன்பெல்லாம் கூறி வந்தாரோ, அந்தப் பெரியார் அந்தப் பிற்போக்கான கொள்கைகளைக் கடைப் பிடிக்கக்கூடாது என்று பெரியாரிடத்தில் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் பெரியார் அவர்கள் எதற்கும் செவிமடுக்காமல், இயக்கம் தமக்குச் சொந்தமானது என்றும், இயக்கச் சொத்துக்கள் அனைத்தும் தமக்கே சொந்தமானவை என்றும், தமது நம்பிக்கைக்குரிய மணியம்மையாரே தமக்கும் தமது இயக்கத்திற்கும் வாரிசு என்றும், தமது இயக்கத்தில் முட்டாள்கள் மட்டுமே இருந்தால் போதும் என்றும், தாம் சொல்லுவதை மட்டும் கேட்டு நடக்க ஆட்கள் இருந்தால் போதும் என்றும், தாம் தான் இறுதிப் பிறவித் தலைவர் என்றும் கூறித் திருமணம் என்ற பெயரால் அமைந்த அந்த ஏற்பாட்டைச் செய்து கொண்டார்.

பெரியார் வகுத்த இலக்கணத்திற்குத் தம்மை ஆளாக்கிக் கொண்டவர்கள் அவரோடு இருந்து பணிபுரிய இசைந்தனர். இயக்கக் கொள்கைகளிடத்தும், இயக்கவளர்ச்சியிடத்தும் நீங்காப் பற்றும் தணியா ஆர்வமும் கொண்டவர்களும், மக்களாட்சிப் பண்பினிடத்து மதிப்புக்கொண்டவர்களும், கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு ஆகியவற்றை மேற்கொண்டவர்களும் ஆன பெரும்பாலோர் ஒதுங்கி வந்து தனி அமைப்பு, 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற பெயரில் அமைக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. இது நீதிக்கும், நேர்மைக்கும் ஒழுங்குக்கும், முறைக்கும், மக்களாட்சிப் பண்பிற்கும் பொருந்திவரக் கூடிய ஒரு செயலாகுமேயல்லாமல் பொருந்தாத ஒன்று அல்ல என்பதை நண்பர் உணர்வாராக!

—இரா. நெ

# கொள்கை வீரனே மனங்குன்ரு தீரனே!

## உன் பணி வெற்றிபெறும்!



தோழர் கே. வி. கே சாமி இறந்து ஓராண்டுக் காலமாகிறது! அவர் இறந்தார் என்றுகூடக் கூறமுடியாது, அவர் பிரிக்கப்பட்டார், கொடுவாளால், கெடுமதியாளரின் கொடும் செயலால்!

ஓராண்டுக் காலமாகியும் இன்னும் அந்த வேதனை ஆறவில்லை, நினைவு மாறவில்லை! ஆழ்கடலில், அலைகடலில் மூச்சடக்கி, உள்ளே முழுகி, மிகுந்த போராட்டத்துக்குப்பின் வெளியிலெடுத்துவந்த முத்தை அழகு பார்த்து மகிழும் நேரத்தில், திடீரென அந்த முதததை யாரேனும் பறித்துச் சென்ருல், வைத்திருந்த ஏழையின் மனம் எவ்வாறு துயருறும்! இழந்த முத்தை நினைத்து எப்படியெல்லாம் அவன் கலங்குவான்! அதைப்போல, தூத்துக்குடியில் நமக்குக் கிடைத்த நன்முத்து, நம்மிடமிருந்து பறிக்கப்பட்டது, முத்தை இழந்த நாம் அதை நினைத்து நினைத்து மனம் அழுங்குகிருேம்! எப்படித்தான் அந்த நினைவு மாறும்! நாம் இழந்ததை எப்படித்தான் மறக்க முடியும்!

தூத்துக்குடி என்ற பெயரைக் கேட்கும்பொழுதெல்லாம் அந்தக் கொள்கைவீரன் தானே நம் மனக்கண்முன் வருகிருன்! பொதுக்குழுவோ, செயற்குழுவோ, நாட்டு நிலைமை குறிக்கச் செல்லும ஆய்வுக் குழுவோ, கட்சியின் முக்கிய கூட்டங்கள் கூடும்பொழுது, "சாமி இங்கு இல்லை" என்ற எண்ணம் உண்டாகிறதே! தேர்தலில் நிற்பது என்று முடிவெடுத்த பொழுது, "தூத்துக்குடிக்குச் சாமி!" என்ற எண்ணம் உண்டானதே! தேர்தல் வெற்றிகளைக் கண்டபொழுது சாமி தந்திருக்கக்கூடிய வெற்றி நினைவுக்கு வருகிறதே!

கொள்கை வீரனே! ஆபத்துகள் சூழ்ந்த நேரத்திலும், மனங் குன்ருத தீரனே! உன் நினைவு எங்களுக்கு என்றென்றும் ஒரு தூண்டுகோலாக, வழிகாட்டும் ஒரு சுடரொளியாக இருக்கும்! நீ விட்டுச் சென்ற பணியை நாங்கள் தொடர்ந்து நடத்தி வெற்றி காணுவோம் எனச் சூளுரைக்கிருேம்!

வாழ்க அவன் நினைவு!

வளர்க அவன் கொள்கை!

## அண்ணுவும் சாமியு

தோழர் கே. வி. கே. சா
அவர்கள் துடிதுடிப்பும் ஆ
திரத்துடன் பேசும் இயல்
உடையவர். சிறு காரியம
ருந்தாலும், தனக்குத் தோ
ரியதை வைத்துக்கொண
மிகக் கடுமையாக வாதாடுவ
கழகத்தின் பொதுக் குழு கூ
டங்கள் நடைபெறும் பொழு
தோழர் சாமி பேசாத கூட்
கள் இருக்காது. மிகக் கார
மான விவாதத்தைக் கிளப்பி
டுவார். அவர் சொற்களும் மு
மும் கடுமையாக இருக்கு
குறிப்பிட்ட பிரச்சினை
இரண்டிலொன்றைப் பார்த்
விடுவது போலப் பேசுவா
ஆனல் என்ன பிரச்சி
என்று பார்த்தால், பல சம
களில் அது விவாதத்திற்
அவசியமற்றதாக இருக்கு
மற்ற உறுப்பினர்கள் விவா
தில் கலந்து கொண்டு இ
சொல்லுவதை மறுத்தா
இவரும் பதிலுக்குப் ப
ஏதாவது சொல்லிவைப்ப
விவாதம் அதிக வலுவடைய
நேரம் அதிகமாவது கண்
அண்ணுவோ, மற்ற தலை
களோ எழுந்து சமாதான
சொல்வார்கள், உடனே தோ
சாமி எழுந்து "சரி, இப்பொ
ழுது என் திருததத்தை
வாபஸ் வாங்கிக் கொள்
றேன்!" என்று சிரித்து
கொண்டு உட்காருவார்! அ
வரை சாமி பேசி வந்த
வேடிக்கையாக என்று ப
ருக்கு அப்பொழுதுதா
தெரிய வரும்.

அறிஞர் அண்ணுவிட
தோழர் சாமிக்கு எப்பொழு
தனி மதிப்பும் அடக்க
உண்டு. மற்றவர்களி
அவர் எப்படி வீறு
நடந்து கொண்ட போதி
அண்ணு அவர்கள் ஒ
சொல்கிருரென்ருல் அ
மீறி சாமி அவர்கள் நடந்
கிடையாது.

திராவிட முன்னேற்றக்
கம் ஆரம்பித்த பொழு
தோழர் சாமி அதில் சேர்
பணியாற்றினுர். "சென்
மாநிலத்துக்குக் கவர்ன
வரும் ஆற்றல் படைத்த
கே. வி. கே. சாமி!" எ
பெரியார் அவர்கள் சாமியை
போற்றிப் புகழ்ந்திருக்கிறு
இருந்தாலும் திராவிடர் கழ
திலிருக்க மனமின்றி, புதி
உருவான கழகத்தில் சேர்
அண்ணுவின் தலைமையில் ப
யாற்ற முன் வந்தார். சிறி
காலத்துக்கெல்லாம் தூத்
குடியில் இருந்த சூழ் நிலையி
கழக அமைப்பில் சில சிக்
கள் உண்டாயின. தூத்துக்
அமைப்பில் போட்டி உண்ட
அதை மற்றக் கட்சியின
கூர்ந்து கவனித்துப் பய
படுத்த நினைக்கின்றனர் எ
பது அண்ணுவுக்குத் தெ
வந்தது. போட்டியை தவிர்

(7-ம் பக்கம் பார்க்க)



# தோழனை விரட்டிய தோழி!

..ரத்தையிடம் தூதுபோய் ..ம் பாணன் ஒருவன், தலை..ிடம் பரத்தைபற்றிய மயக்க ..ழி பல கூறி, அவனைப் ..த்தைபால் இட்டுச் செல்ல ..லுகிறான். பாணனின் பாகு ..ழிகளிலே மயங்கிய தலைவ..ம் தலைவியை விட்டுப் ..ந்து பரத்தையிடம் போய்ச் ..ருகிறான்.

..ரத்தை தரும் இன்பத் ..லே மூழ்கிக் கிடக்கும் தலை..ன், தன் இல்லத்தைப் ..றியோ, தன் கண்ணுக்கும் ..த்துக்கும் இனியவளாய் ..ந்து வந்த அன்பு மனையா..ப் பற்றியோ, தன் தொழிற் ..றை பற்றியோ ஒரு சிறிதும் ..லை கொள்ளாமல் இருந்து ..கிறான். தலைவனிடமிருந்து ..தியான ஆடை அணிகலன் .., சொத்துக்கள் முதலிய ..றைக் கறப்பதிலே மிகவும் ..ணும் கருத்துமாக இருந்து ..கிறாள் பரத்தை. தலைவ..ன் கைப் பொருள்களையெல் ..ம் பாணன் வேறு கறந்து ..கிறான். தலைவன் தன் ..ர்கால நிலைமைகளைப் ..றிச் சிறிதும் கவலை கொள் ..மல் பரத்தைச் சேரியிலேயே ..ழுதுபோக்கி வருகிறான்.

..தலைவனைக் காணாமல் ஓயா.. அழுது புலம்புகிறாள் ..லவி. தோழி தலைவனைத் ..டி எங்கு பார்த்தாலும் ..லந்து திரிகிறாள். இறுதி.. அவன் பரத்தை வீட்டில் ..கியிருக்கிறான் என்ற செய் ..யை அறிந்துகொண்டுவந்து, ..தனைத் தலைவியிடம் அறி..க்கிறாள். அதுவரையில் ..ழுது புலம்பிக் கொண்டி..ந்த தலைவி தலைவனின் ..டாத செயலைக் கேள்வியுற்ற ..ம் மிக்க ஆத்திரமும் வருத் ..மும் கொள்கிறாள்! அற ..ார்க்கு அளித்தலும், விருந் ..ரை ஏற்றலும் ஆகிய இல் ..றச் செயல்களைச் செவ்வனே ..ந்து, குடியின் பெருமை..ப் காப்பாற்றுவதிலே கவ..ம் செலுத்துகிறாள் தலைவி.

..தலைவன் தன் கைப்பொருள் ..ழுவதையும் இழந்துவிட்டுப் ..த்தையின் அருளன்பிலே ..ழவேண்டிய நிலைக்கு வந்து ..ருகிறான். தலைவனிடம் ..ருளில்லை, இனி அவனை ..வத்துக் கொண்டிருப்பதிலே ..னில்லை என்பதை அறிந்து ..ாண்ட பரத்தை தலைவனை வீட்டைவிட்டு வெளியேற்றுகிறாள்.

கையில் பொருளேதும் இல்லாமல், நடுத் தெருவில் கைவிடப்பட்ட தலைவன் எங்கு போவது என்று தெரியாமல் திகைக்கிறான். பாணனைத் துணைக்கு அழைத்துக் கொண்டு பரத்தையர் சேரியை விட்டு ஊருக்குள் வருகிறான். இப்பொழுதுதான் தலைவியின் அருமை பெருமைகளையெல்லாம் எண்ணிப் பார்க்கிறான். அழகிலும், அன்பிலும், பண்பிலும் பரத்தையைவிட எவ்வளவோ சிறந்தவளாகத் தன் தலைவி இருந்தும், அவளை விட்டு விட்டுச் சென்றது எவ்வளவு அறியாமையாகும் என்பதை நினைந்து வருந்துகிறான். மீண்டும் தலைவியிடம் சென்றால் அவள், தன்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளுவாளோ அல்லது விரட்டி அடிப்பாளோ என்ற ஐயப்பாட்டுடன் அச்சமும் கொள்கிறான். பரத்தை வீடு சென்று வந்த தன்னை உற்றார் உறவினர் யாரும் மதித்து ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதையும், கைப்பொருளில்லாததால் பரத்தையர் யாரும் தன்னை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதையும் எண்ணிப் போக்கிடம் அறியாது திகைக்கிறான். எவ்வளவு குற்றம் செய்திருந்தாலும், அவற்றையெல்லாம் மன்னித்துத் தன்னை ஏற்றுக் கொள்ளக்கூடியவராக இருக்கக்கூடியவள் தன் மனையாளைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது என்ற முடிவுக்கு வருகிறான். எப்படியும் தன் வீட்டிற்கே போய்ச் சேருவோம் என்ற நினைப்புடன் பாணனோடு செல்லுகிறான்.

வீடு நெருங்க நெருங்க தலைவனுக்கு அச்சம் பிறக்கிறது. எப்படித் தன் அருமை மனைவியின் முகத்தில் விழிப்பது என்று எண்ணி நெஞ்சம் நடுக்கங்கொள்கிறான். கால்களோ நடக்க முடியாத அளவுக்கு ஒன்றையொன்று பின்னி அவனைத் தடைப்படுத்துகின்றன. வீடு மிக அருகில் வந்தவுடன் மேற் செல்லாமல் ஒரு சந்தில் ஒளிந்து நின்றுகொள்கிறான்.

அவன் பாணனை அருகழைத்து "பாணனே! நீ முதலில் போய்த் தலைவியும் தோழியும் எப்படி இருக்கிறார்கள் என்று பார். அவர்கள் சினக் குறிப்புகளோடு காணப்பட்டால் அவர்களது சினத்தைத் தணிக்க முயற்சி எடுத்துக் கொள். அவர்கள் இயல்பாக இருந்தால் நான் அங்கே வர இருப்பதை மெல்ல அறிவித்து விடு. நான் வருவதைப் பொறுத்து அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டு நீ விரைவில் வந்து சேரு!" என்று சொல்லி அனுப்புகிறான்.

பாணன் அச்சத்தோடு செல்கிறான். தலைவனின் வீட்டு வாயற்படிகளில் மெல்ல ஏறி, சாளரத்தின் வழியாக உள்ளே யார் இருக்கிறார்கள் என்று பார்க்கிறான். தலைவியும் தோழியும் வீட்டின் நடுவாசல் தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொண்டு உரையாடிக் கொண்டிருக்கிறார்கள். தெருக் கதவு சாற்றப்பட்டிருக்கிறது. பாணன் கதவினருகில் சென்று கதவைத் தட்டுகிறான். "யாரது?" என்று கேட்டுக்கொண்டு தோழிவந்து கதவைத் திறக்கிறாள். நிற்பவன் பாணன் என்பது தோழிக்குத் தெரியவில்லை.

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

"தாங்கள் யார்? என்ன வேண்டும்?" என்று தோழி கேட்கிறாள்.

"நான் இவ்வீட்டுத் தலைவருக்கு நண்பன்!" என்கிறான் பாணன்.

"வீட்டில் அவர் இல்லையே!"

"நான் வீட்டுத் தலைவியாரைத்தான் பார்க்க வந்திருக்கிறேன்!"

"அவர்களிடம் என்ன செய்தி சொல்லவேண்டும்?"

"நானே நேரில் பார்த்துச் சொல்ல விரும்புகிறேன்!"

"அப்படியானால் வாருங்கள்!" என்று சொல்லி அவனை உள்ளே அழைத்துக் கொண்டுபோய்த் தலைவியிடம் "இவர் தங்களைக் காண வேண்டுமாம். தலைவருக்கு நெருங்கிய நண்பராம்!" என்று தோழி அறிமுகப்படுத்துகிறாள்.

"எங்கு வந்தீர்கள்? என்ன செய்தி?" என்று தலைவி வினவுகிறாள்.

"நான் தலைவரிடம் இருந்து வருகிறேன்!" என்று விடையிறுக்கிறான்.

"தலைவரிடமிருந்தா?"

"ஆமாம்!"

"அவர் எங்கே இருக்கிறார்?"

"அவர் இதுகாறும் பரத்தையர் சேரியில் இருந்தார். இப்பொழுது ஊருக்குள்ளே வந்திருக்கிறார்!"

"அவரை எப்பொழுது பார்த்தீர்கள்?"

"இப்பொழுது அவரிடத்திலிருந்துதான் வருகிறேன்!"

"அவர் ஊருக்குள்ளேவந்து என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவர் பரத்தையர் சேரியைவிட்டு ஏன் வந்துவிட்டார்?"

"பரத்தையின் போக்கு அவருக்குப் பிடிக்கவில்லை. அவள் மிகவும் சீர்கெட்டவள் ஆவாள். தங்களுடைய அருமை பெருமைகளையெல்லாம் மதியாமல் போனதற்காக இப்பொழுது பெரிதும் வருந்துகிறார். தங்களைக் காணவும் தங்களோடு வாழவும் அவர் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறார்!"

"இப்பொழுதுதான் அவருக்குப்புரிந்ததாமோ?" என்று ஆத்திரத்தோடு தலைவி கேட்கிறாள்.

"தங்களிடம் அவர் எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறார் தெரியுமா?"

"தாங்கள் அவரை எப்படி அறிவீர்கள்?"

"எனக்கும் அவருக்கும் நீண்ட நாட்கள் பழக்கம் உண்டு"

தாங்கள் எங்கே இருக்கிறீர்கள்?"

"நானும் பரத்தையர் சேரியில்தான் வாழ்கிறேன்" என்று பாணன் அவசரத்தில் உண்மையைச் சொல்லிவிடுகிறான்.

தலைவியும் தோழியும் திகைத்துப் போய்விடுகிறார்கள். அவர்களுக்கு ஏன் திகைப்பு ஏற்பட்டது என்பதை அவன் புரிந்து கொள்ளவில்லை. கேலியாக அவனைக் கேட்டு வைப்போமே என்று கருதிக் கொண்டு தோழி அவனைப் பார்த்து, "தலைவருக்கு நெருங்கிய நண்பரான அறிவும் ஆற்றலும் நிறைந்த பாணர் என் இருக்கிறார்களே, அவர் தாங்கள் தானா?" என்று கேட்கிறாள்.

தன்னைப் பாராட்டுகிறார்கள் என்று எண்ணிக்கொண்ட பாணன் "ஆமாம்! ஆமாம்! நான் தான்!" என்கிறான்.

உடனே தோழி "சீ! நாயே! வெளியே போ! இங்கு உனக்கு

ன்ன வேலை! போய்விடு வளியில்!" என்று தூற்று ள். பாணன் அச்சத்துட ம் நடுக்கத்துடனும் மெல்ல ன்றலேயே நகர்ந்து வந்து ரயிற்படியில் நிற்கிறாள்,

அப்பொழுது ஊர்ப் பொது லத்தில் குடியிருக்கும் குய ன் கதிர்போன்று பூங்கொத் க்களை வைத்துக் கட்டிய ாச்சிமாலையை அணிந்து காண்டு, திருவிழா நடை பறும் செய்தியை வீடு தாறும் உரத்த குரலில் அறி த்துக்கொண்டு வருகிறான். கன்று நீண்டு விளங்கும் ந்தத் தேரோடும் தெருவி ள்ள வீட்டார் எல்லோரும் வளியே வந்து விழாச் செய் யை அறிகின்றனர். "இன்று வ்வூரில் திருவிழா துவங்கி ட்டது. எல்லோரும் வந்து ண்டு களியுங்கள்!" என்று யவன் சொல்லிக் கொண்டு ருகிறான்.

தலைவனின் வீட்டு வாயிலண் டயில் நிற்கும் தோழி அந் க் குயவனை அழைத்து, "நீ ாமரை மலர்கள் நிறைந்த ளங்களும், வயல்களும் றைந்த பரத்தையர் சேரிப் க்கம் இப்பொழுது போகப் ாகிறாயா?" என்று வினவு றாள்,

அதற்கு அவன் "ஆமாம்!" ன்கிறான்.

"அப்படியானால் திருவிழாச் சய்தியோடு நான் சொல்லு தையும் சேர்த்துக்கொண்டு ந்தப் பகுதியில் சொல்லு!" ன்று தோழி கூறுகிறாள்.

"என்ன சொல்லவேண் ம்?" என்று அக் குயவன் கட்கிறான்.

"கூரிய பற்களையும் மெல் ய இடையையும் உடைய ங்கைமாரே! கையிலே யாழை ந்திக்கொண்டு யாரையும் க்கவல்ல பாட்டுக்களைப் டுவதில் வல்லவனான ணன் பலர்க்கும் பல துன் ங்களை இழைத்து வளர்த்து ருகிறான். அவன் உள்ளத் லே பொய்யை மறைத்து வத்துக் கொண்டு, மேலால் மய்யைப் பூசி மெழுகிப் பேசு றான். அவனுடைய கொடிய சாற்களுக்கு மதிப்பு அளிக்கா ல் நீவிர் நும்மைப் பாதுகாத் க் கொள்வீராக!' என்று ர்த்துக் கொண்டு சொல்லு யாக!" என்று கூறுகி ள்.

அதனைக் கேட்டுக் கொண் ருந்த பாணன் இனியும் ங்கு தங்கி இருந்தால், ஏச்ச ம் தூற்றலும் நிரம்பக் டைக்கும் என்றும், தலைவி ம் தோழியும் பரத்தையிட ருந்து மீண்டு வந்த தலை னை ஒருக்காலும் ஏற்றுக் காள்ள மாட்டார்கள் என் ம் எண்ணி அவ்விடமிருந்து ழுவி விடுகிறான்.

* * *

இது நற்றிணை 200 ஆம் சய்யுளின் கருத்தைத் தழுவித் தீட்டப்பட்ட சொல்லோவியமாகும். இந்தச் செய்யுள் மருதத் திணையின்பாற்பட்ட 'தோழி தலைமகளது குறிப்பறிந்து, வாயிலாகப் புகுந்த பாணன் கேட்பக் கூறியது' என்னும் பிரிவைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் கூடலூர் பல் கண்ணனார் என்ற புலவராவார். இவர் சோழநாட்டைச் சேர்ந்த கூடலூரில் வாழ்ந்தனர் என்று சொல்லப்படுகிறது. இவரது பாடல்கள் நற்றிணையில் இரண்டு காணப்பெறுகின்றன.

கண்ணி கட்டிய கதிர அன்ன  
ஒண்குரல் நொச்சித் தெரியல் சூடி  
யாறுகிடந் தன்ன அகனெடுந் தெருவில்  
சாறென நுவலும் முதுவாய் குயவ  
இதுவும் ஆங்கண் நுவன்றிசின் மாதோ  
ஆம்பல் அமன்ற தீம் பெரும் பழனத்துப்  
பொய்கை ஊர்க்குப் போவோய் ஆகிக்  
கைகவர் நரம்பில் பனுவல் பாணன்  
செய்த அல்லல் பல்குவ வையெயிற்று  
ஐதகல் அல்குல் மகளிர்இவன்  
பொய்பொதி கொடுஞ்சொல் ஓம்புமின் எனவே

[நற்றிணை-200]

பொழிப்புரை: அரும்பு கட்டிய கதிர்போன்ற ஒளி பொருந்திய பூங்கொத்தினையுடைய நொச்சி மாலையைச் சூடி ஆறு கிடந்தாற்போன்ற அகன்ற நெடிய தெருவின்கண்ணே யாவரும் அறிய "இற்றை நாளில் இவ்வூரிலே திருவிழா நடைபெறுகின்றது. எல்லோரும் வந்து காணுங்கள்" என்று கூறிச் செல்கின்ற அறிவு வாய்ந்த குயவனே! ஆம்பல் நெருங்கிய இனிய பெரிய வயலும், குளமும் உடைய ஊரின் கண்ணே நீ போய் ஆங்குள்ள மகளிரை அழைத்துக் "கூரியஎயிற்றினையும் மெல்லிய தாயகன்றஅல்குலையுமுடையமங்கையீர்! மயங்குவதற்குக் காரணமான நரம்பினையுடைய யாழிலே பாடும் இசைப் பாட்டு நுவலவல்ல பாணன் செய்த துன்பங்கள் மிகப் பலவாகி வளர்வனவாயின; ஆதலால் இப்பாணன் உள்ளால் பொய்யை நிரப்பி வைத்து மேலால் மெய்ம்மையைக் கொண்டு மூடி நுவலுகின்ற கொடிய சொல்லிலே கண்ணருள் செய்யாது நும்மைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்" என்று, முதலில் நீ திருவிழா நடப்பதைச் சொல்லிக் கொண்டு போவதுடன், இதனையுங் கூட்டி அவ்விடத்துள்ளார்க்குக் கூறிப்போவாயாக!

கண்ணி கட்டல்-அரும்பு தோன்றுதல்; சாறு-திருவிழா; குரல்-பூங்கொத்து; தெரியல்-மாலை; ஆம்பல்-தாமரை; பழனம்-வயல்; பொய்கை-குளம்; பனுவல்-பாட்டு; ஐது-மெல்லிய.]

பரத்தையை நாடிச் சென்ற தலைவனையும், அவனுக்கு உதவியாக இருந்த பாணனையும் தலைவியும் தோழியும் எவ்வளவு வெறுத்தொதுக்குகிறார்கள் என்பதைப் புலவர் அழகுற எடுத்தியம்பியுள்ளார்,

தலைவன் மீண்டும் வீடுவந்து சேர நினைத்த போதிலும், அவனை ஏற்றுக்கொள்ள மறுக்கும் தலைவியின் உள்ள உறுதியும், ஒழுக்கத்திடத்து அவள் கொண்டுள்ள மதிப்பும் எத்துணைச் சிறந்தவை என்பதை உணரலாம்.

அந்த நாட்களில் ஊர்ப் பொது நிலத்திலே குடியிருக்கும் குயவன் ஊரில் நடைபெறும் திருவிழாச் செய்தியை ஊரார்க்கு அறிவிப்பான் என்று இச் செய்யுளின் மூலம் தெரியவருகிறது.

பாணன் யாழ் ஏந்தி இசைப் பாட்டு பாடும் வல்லுநன் என்பது உணர்த்தப்படுகிறது.

## 100 மரம் வைத்து 101 மரம் பட்டுப்போன கதை!

"வனமகோத்சவத்தில் எவ்வளவு மரங்கள் வைக்கப்பட்டன எவ்வளவு மரங்கள் பட்டுப் போய்விட்டன என்று கேட்டதற்கு, ஊரிலிருந்த கணக்கப்பிள்ளை பதில் எழுதினானாம். 'எங்கள் ஊரில் வைத்த மரம் 100, பட்டுப்போன மரம் 101' என்று! அதைப் பார்த்த மேல் அதிகாரிக்குக் கோபம் வந்துவிட்டது. 'நூறு மரம் வைக்க, அதில் நூற்றியோரு மரம் எப்படிப் பட்டுப்போகும்; ஏதோ கணக்குத் தப்பு!' என்று அந்தக் கணக்கப்பிள்ளையைக் கூப்பிட்டுக் கேட்டான். கணக்கப்பிள்ளை விளக்கங் கொடுத்தான்: 'எங்களூர் தாலுகா கச்சேரிக்கு முன் ஒரு பெரிய மரம் இருந்தது, வனமகோத்சவத்தின் போது அதன் கிளைகளை வெட்டி, நூறு மரம் நட்டோம். நடப்பட்ட இந்த நூறு மரங்களும் பட்டுவிட்டன. நூறு மரம் வைக்கக் கிளைகளை வெட்டிவிட்டதால், தாலுகா கச்சேரிக்கு முன்னால் இருந்த பெரிய மரமும் பட்டுப்போய்விட்டது. ஆக வைத்த மரம் நூறு, பட்டுப் போன மரம் நூற்றியொன்று! என்று சொன்னான். நமது அரசாங்கம் நடத்தும் காரியங்கள் அந்தக் கணக்கப்பிள்ளை கொடுத்த கணக்கைப் போல்தான் இருக்கின்றன."

—திருவண்ணாமலை மாநாட்டில்.  
தோழர் சி. பி, சிற்றரசு.

## அண்ணாவும் சாமியும்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நினைத்த அண்ணா அவர்கள், தோழர் சாமியைக் கூப்பிட்டு- சோழவந்தானில் நடைபெற்ற மதுரை மாவட்ட மாநாட்டின் போது இது நடந்தது- "இரண்டாண்டு காலத்துக்கு நீ விலகி இரு!" என்று சொன்னார். தோழர் சாமி அவர்கள் மிகக் கலக்கத்துடன் "சரி அண்ணா! நீங்கள் சொல்கிறபடி நடக்கிறேன்!" என்று ஒப்புக் கொண்டார்.

அதற்கு பின் அண்ணாவைப் பார்க்கும் பொழுதெல்லாம், "அண்ணா! நான் மீண்டும் வந்து சேரலாமா?" என்று தோழர் சாமி கேட்டுக் கொள்வார். "நீங்கள் சொன்னபடி ஓராண்டு காலம் கடந்து விட்டது, பதினெட்டு மாதங்கள் ஆகி விட்டன. நான் சேர்ந்து கொள்ளலாமா!" என்று கடிதங்கள் எழுதியபடி இருந்தார். இந்தச் சமயத்தில், விலகியிருக்கும் தோழர் சாமியை தம் பக்கம் இழுத்துக் கொள்ள மற்றக் கட்சியினர் எவ்வளவோ முயன்று பார்த்தனர், இடித்துக் காட்டினர், புகழ்ச்சி பாடினர், தங்கள் கட்சிக்கு வந்தால் என்னென்ன பதவிகள் கிடைக்கக்கூடும் என்பதைச் சொல்லி வைத்தனர், ஆனால் தோழர் சாமியின் பார்வையும் கடிதங்களும் காஞ்சிபுரத்தை நோக்கி சென்றனவேயன்றி, வேறு பக்கம் வேடிக்கைக்காகக் கூடத் திரும்ப வில்லை. கடைசியாக இரண்டாண்டு காலங் கழித்துக் கூட அல்ல, நான்கு ஆண்டுகள் கழித்து, தோழர் சாமி அவர்களுக்கு அண்ணா அவர்கள் அனுமதி தந்தார். மிகுந்த குதுகலத்துடன் தோழர் சாமி மீண்டும் கழகத்தில் சேர்ந்து பணியாற்றினார். தான் விலகியிருந்த நேரத்தில் செய்திருக்க வேண்டிய பணியையும் சேர்த்து முடிப்பது போல, தன் உயிர் பறிக்கப்படும் வரை அரும்பணியாற்றினார்.

திருநெல்வேலி மாவட்டச் செயலாளராக தோழர் சாமி இருந்தபொழுது, மிகப் பொறுப்புடனும் ஒழுங்குடனும் தனது பணியினைச் செய்தார். திருநெல்வேலி மரவட்டத்தில் அறிஞர் அண்ணாவின் சுற்றுப் பயணமோ, மற்ற முன்னணி வீரர்களின் கூட்டங்களோ இருந்தால், திருநெல்வேலி மாவட்டத்தின் எல்லையில் தோழர் சாமி அவர்கள் காத்திருப்பார். தலைவர் வந்ததும் அவர்களை வரவேற்று, சுற்றுப் பயணத்தில் உடனிருந்து, கடைசியாக அலர்கள் திரும்பி மற்றொரு மாவட்டத்துக்குப் போகும்போது திருநெல்வேலி மாவட்டத்தின் எல்லைவரை உடன் வந்து, பிரிவு பெற்றுத் திரும்பிப்போவார்! இவ்வாறு தான் எடுத்த பொறுப்பில் ஒரு மதிப்பையும் கட்டுப்பாட்டையும் தோழர் கே. வி. கே. சாமி மேற்கொண்டிருந்தார்!

# அண்ணாமலை தந்த கருத்துச் சுடர்கள்

—(0)—

**திருவண்ணாமலையில் செப்-22ல் கூடிய வட ஆற்காடு மாவட்ட இரண்டாவது திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :—**

## 1. அனுதாப தீர்மானம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரரும் நெல்லை மாவட்டத் தி. மு. கழகச் செயலாளரும், தொழிற் சங்கங்களின் தலைவருமான கே. வி. கே. சாமி, தூத்துக்குடியில் கழகத்தின் அரும்பணி ஆற்றிவந்த தோழர் தாள முத்து ஆகியோரும், நாதசுர இசைப்பெரும் புலவராய் விளங்கிக் கலைத் துறையில் அரும்பணி ஆற்றிவந்த திருவாடுதுறை இராசரத்தினம் அவர்களும், நகைச்சுவை மன்னரும், தி. மு. கழகத்திடத்து நீங்காப்பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு விளங்கியவரும், பெரு வள்ளலும் ஆகிய கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களும், வேலூர் ஆதிமூலம், வந்தவாசி தங்கவேலு ஆகியோரும் மறைந்தது குறித்து இம்மாநாடு மிக்க துன்பமும் துயரமும் கொள்வதோடு தன் ஆழ்ந்த அனுதாபத்தை அன்னார்களின் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர் ஆகியோருக்கும் தெரிவித்துக்கொள்கிறது.

—தலைவர்.

## 2. வாக்காளர்க்கு நன்றி தெரிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகம், முதன் முதலாகப் போதுமான வசதியற்ற நிலையில், கடந்த பொதுத் தேர்தலில் ஈடுபட்ட போதிலும், தமிழ்நாட்டுப் பெருங்குடி மக்களான வாக்காளர்கள், மாற்றுக் கட்சிகளின் பலமான தூற்றலையும் பழிசுமத்தலையுங் கூடப் பொருட்படுத்தாமல் 17 இலட்சம் வாக்குகளை அளித்து, கழகத்திற்கு குறிப்பிடத்தக்க வெற்றி தேடித் தந்ததற்காக இம்மாநாடு வாக்காளர் பெருமக்களைப் பாராட்டுவதுடன், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறது.

—தலைவர்.

## 3. முதுகுளத்தூர் வகுப்புக் கலவரம்

இராமநாதபுரம் வட்டத்தைச் சேர்ந்த முதுகுளத்தூர், இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய வட்டங்களைச் சார்ந்த சிற்றூர்களில் வகுப்புக் கலவரங்கள் மூண்டு கொலை—கொள்ளை—தீயிடுதல் போன்ற அக்கிரமங்கள் தாண்டவமாடவும், அவற்றின் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் அச்சங்கொண்டு, அவதியுற்று ஊரைவிட்டே ஓடும்படியாகவும் நிலைமைகள் ஏற்பட்டிருப்பதைக் கண்டு இம்மாநாடு துயரமும், வருத்தமும், கவலையும் அடைவதுடன், காலா காலத்தில் தலையிட்டுத் தவறுன வகுப்புணர்ச்சி தலை தூக்காமல் அமைதியை நிலை நாட்ட சென்னை அரசியலார் முயலாமல், கலவரங்களினால் கொலைகள் ஏற்பட்டது போதாதென்றுபோலீசார் துப்பாக்கிப் பிரயோகங்கள் செய்து மேலும் சிலரைச் சுட்டுத்தள்ளியிருப்பது கண்டு வருத்தங்கொண்டு அச்செய்கையை வன்மையாகக் கண்டிப்பதோடு, அரசியலார் இதுவரையில் கையாண்டு வருகிற முறைகள் கலவரங்களை வளர்ப்பதாகவே இருக்கிற காரணத்தால், கலவரப் பகுதிகளுக்குச் சென்று அமைதியை நிலைநாட்ட சர்வகட்சித் தலைவர்களைக்கொண்ட சமாதானக் குழு ஒன்றை நிறுவி, நிலைமை சீரடைவதற்கான நடவடிக்கைகளில் உடனடியாக ஈடுபடும்படி இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிதல் : எஸ். முத்து,

வழிமொழிதல் : கள்ளக்குறிச்சி நடராசன், எம். எல். ஏ.

## 4. ஐந்தாண்டுத் திட்டம்

தென்னாட்டை வஞ்சித்து வடநாட்டை வளமாக்கும் முறையில் ஐந்தாண்டுத் திட்டத்தைப்போட்ட டில்லி ஆதிபத்யம் இப்பொழுது அதற்கான நிதி நிலைமைகளைச் சமாளிக்க முடியாத நிலையில், பெரியதும்முக்கியமுமான திட்டங்களை மட்டும் காப்பாற்றுவதாகச் சொல்லிக்கொண்டு, வடநாட்டில் போடப்பட்டுள்ள பெருந் திட்டங்களை மட்டும் நிறைவேற்றுவதில் மிக்கக் கவனமாக இருப்பதை இம்மாநாடு வன்மையாகக்கண்டிப்பதுடன், தொழில்துறையில் தாழ்ந்துள்ள தென்னாட்டை வளப்படுத்தும் வகையில் திட்டத்தை மாற்றி அமைக்குமாறு இம்மாநாடு டில்லி அரசை வற்புறுத்துகிறது.

முன் : என். எஸ். இளங்கோ

வழி : கி. மனோகரன்

## 5. விலைவாசி ஏற்றம்

பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டங்களைத் தொடர்ந்து போட்ட காரணத்தாலும், ஐந்தாண்டுத் திட்டங்களின் பேரால் வடநாட்டில் மட்டும் பெருவாரியான பணத்தைக் கொட்டிய காரணத்தாலும், பணப்பெருக்கம் உண்டாகி, விலைவாசிகள் குறிப்பாக உணவுப் பொருள்களின் விலைகள் ஏறியிருப்பதை இம்மாநாடு கவலையோடு கவனிப்பதுடன், பணப்பெருக்கத்தைத் தணிக்கவும், செலவினங்களை எல்லாப் பகுதிகளிலும் ஏற்ற அளவு பகிர்ந்திடவும், உணவுப் பொருள்களின் விலைகளைத் தக்கமுறையில் கட்டுப்படுத்தவும் வேண்டும் என இந்திய அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன் : கே. கே. நீலமேகம்

வழி : புதுச்சேரி வழக்கறிஞர் எஸ். பெருமாள்
ஈ. ஆர். கிருஷ்ணன்

## 6. வரிக் கண்டனம்

வாழ்க்கைத் தரம் குறைந்து, விலைவாசிகள் உயர்ந்து, நாட்டின் பொருளாதாரம் சீர்கேடு அடைந்திருக்கும் நிலையில், பெருவாரியானப் பொதுமக்களைப் பாதிக்கும்படி நேர்முகமாகவும், மறைமுகமாகவும் ஆண்டுதோறும் நூறு கோடி ரூபாய் அளவுக்குப் புது வரிகளைப் போட்டுள்ளதானது நாட்டின் நிலைமையை மேலும் மோசமாக்கி இருப்பதற்காக இந்தியப் பேரரசை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், "செலுத்தக்கூடியவர்கள் மீது மட்டுந்தான் வரி போடுவோம்" என்று தேர்தல் காலத்தில் கூறிய காங்கிரசுக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்ததும், நூற்றுக்கு எழுபத்தைந்து பங்கு வரியை ஏழைகள் பயன்படுத்தும் பண்டங்கள்மீது சுமத்தியிருக்கும் முரண்பாட்டைச் சுட்டிக்காட்டுவதுடன், ஏழைகளைப் பாதிக்கும் இக்கொடும் வரிகளை நீக்குமாறு இந்தியப் பேரரசை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

முன் : சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.

வழி : ஆனந்தன் எம். எல். ஏ.
பாலகுருசாமி

## 7. கைத்தறி

தேர்தல் காலத்தில், கைத்தறி நெசவாளர்களுக்கு உறுதிமொழிகள் பல தந்து அவர்களுடைய ஆதரவைத் தேடி பெரும்பான்மை வெற்றி பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அதே கைத்தறி நெசவுத் தொழில் பாதுகாப்பிற்கு என்று, 'கரை போட்ட வேட்டியும், கலர்ப் புடவையும் கைத்தறிக்கே ஒதுக்கப்பட வேண்டும்' என்ற தீர்மானம் சென்னை சட்டமன்றத்தில் வந்தபோது, தமது கட்சிக் கட்டுப்பாட்டிற்காக அதை எதிர்த்து வாக்களித்த வன்செயலை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், கைத்தறி நெசவுத் தொழிலாளர் பாதுகாப்புக்கு நிரந்... மான ஒரு திட்டத்தை இந்... அரசியலார் உடனடியாக... செய்ய வேண்டுமென்று இ... மாநாடு வலியுறுத்துகிறது.

முன் : ப. கண்ணன்

வழி : காஞ்சி - மணிமொழியா... முத்துக்கருப்பன்

## 8. தமிழ் நாடு பெயரிடுத...

தமிழ் மக்களின் தாயகமா... தமிழகத்திற்குச் 'சென்... ராஜ்யம்' என்று வழங்கு... பெயரை மாற்றித் 'தமிழ்நாடு' என்றே பெயரிட்டு வழங்... வேண்டுமென்று பல ஆண்... டுக்காலமாகவே பல்வேறு அ... சியல் கட்சியினரும் வலி... றுத்திக் கேட்டுக் கொண்டு... சென்னை சட்ட மன்றத்தி... அதற்கான தீர்மானத்தை... கொண்டு வந்துங்கூட, ஆளு... கட்சியினராகிய காங்கிரசா... பொதுமக்களின் விருப்பத்தை... மதியாது, மாறாக நடப்பதை... இம்மாநாடு வன்மையாகக் கண்... டிப்பதுடன், மேலும் பொது... மக்களின் விருப்பத்தை அ... மதித்துப் பொறுமையை... சோதிப்பது பெருங் கேடு பய... கும் என்று அரசியலார்க்கு... இம்மாநாடு எச்சரிக்கை செ... கிறது.

முன் : இரா. செழியன்

வழி : சி. பி. சிற்றரசு
அரங்கண்ணல்

## 9. படாஸ்கர் தீர்ப்பு

படாஸ்கர் தீர்ப்பு மக்களு... குத் தெளிவாக இதுவரை... அறிவிக்கப் படாதிருக்கி... வருந்தத்தக்க நிலையில், ஓரள... தெரிவிக்கப்பட்டுவரும் த... வல்களிலிருந்து தமிழ் நாட்டு... குத் திருத்தணியும் அதை... ஒட்டிய சில கிராமங்களும் கிடைக்க இருக்கிறது என்று... அறிந்து இம்மாநாடு மகிழ்ச்சி... யுடன் வரவேற்கிறது.

அதேபோது, ஏற்கெனவே... தமிழ் நாட்டுடன் பல்வேறு... வகையாலும் தொடர்பு... கொண்டு இணைந்து வாழ்ந்து... வரும் சில பகுதிகளும், வள... மிக்க இடங்களும், செல்வ... காடுகளும், நீர்ப்பாசன வசதி... களும், ஆரணியாறு தேக்கத்... திட்டப் பகுதியும், படாஸ்கர்... தீர்ப்புப்படி, அங்கு வாழும் மக்... களுடைய விருப்பத்திற்கு எதி... ராக, தமிழ் நாட்டிலிருந்து... வெட்டி எடுக்கப்பட்டு, ஆந்தி... ரத்திற்கு அளிக்கப்பட இருப்ப... தறிந்து, இம்மாநாடு வருந்து... கிறது. சென்னை அரசு... தொடர்ந்து தமிழ் நாட்டுக்கு... உரிமையுள்ள இடங்களை... இழந்து வருவது கண்டு வருந்...

(11-ம் பக்கம் பார்க்க)

# அவர் வேலை

(ச. வெ. பாண்டியன்)

பொழுது புலர்ந்தது. நான் தூங்கி யெழுந்ததும் ஒரு பெரிய பிரச்சினை என் முன் தயாராக இருக்கும்-இன்றையப் பொழுதை எப்படிக் கழித்துத் தொலைப்பது-இது தான் பிரச்சினை. ஊரைச் சுற்றி தவறுமல் கொள்ளாமல் வருதல், எண்ணுத எண்ணங்களையெல்லாம் மனத்திலே ஓடவிட்டுக் கொண்டு மௌனியாக உட்கார்ந்திருத்தல், கையில் கிடைக்கும் பழைய புத்தகங்களையெல்லாம் சலிக்காமல் வாசித்து முடிப்பது, சீட்டாட்டம், தெரு அரட்டை, ஊர்வம்புகளையெல்லாம் வலியப் பிடித்திழுத்து திறமையாக விமர்சனம் செய்தல் - இவையெல்லாம் போக அவகாசமிருந்தால் தூங்குதல் இது தான் தினசரி கைக்கொள்ளும் நடை முறை. வேலை கிடைக்காதிருக்கிறேன். எத்தனை யோவிதமாகப் பிரயத்தனங்கள் செய்தும் வேலைகிடைக்கவில்லை நான் என்ன செய்ய? எப்படியும் நேரத்தைக் கழித்துத் தொலைத்தாக வேண்டுமே!

மனிதன் செய்யக் கூடிய அத்தனையும் சாத்தியமான பல முறைகளையெல்லாம் கையாண்டு பார்த்து விட்டேன். நாள் தவறுமல் விளம்பரங்களைப் பார்த்து மனுப்போட்டு வருகிறேன், பதில் வந்ததே இல்லை கொஞ்ச நாட்கள் 'இன்ஸ்யூரன்ஸ்' ஏஜண்டாகவும் அலுவல் பார்த்தேன். 'விடியா மூஞ்சிக்கு வேலை கிடைத்தாலும் கூலி கிடைக்காது' என்று சொல்கிருர்களே அதில் எனக்கும் பங்கு உண்டு! ஏனெனில் பெரும் பாலோர் விரும்புகிருர்களே அதிர்ஷ்டம், விதி, யோகம் என்பதாக இதில் ஏதாவது என்னிடம் குடியிருக்க வேண்டாமா?

எனது அனுபவத்தை வைத்துக் கூறுகிறேன் எல்லாக் கவலைகளையும் விட இந்த 'வயிற்றுக்கவலை' இருக்கிறதே அது தான் மிகக் கொடியது. பொறுமைக்கும் ஒரு அளவு உண்டல்லவா? ஒரு நாள் இல்லைமைஎன் பொறுமையையும் மீறி விடவே கல்கத்தா போகலாமென்று முடிவு கட்டி விட்டேன். ஒன்றுக்கும் உதவாத கிராமத்தில் இருந்துகொண்டு என்னத்தைச் சாதித்து விட முடியும்? ஒரு உத்தியோக வேலைக்கு ஈடாகுமா? கல்கத்தாவில் உத்தியோகத்திற்கா பஞ்சம்? தொழில் துறைகளும், வியாபாரத் துறைகளும், வருமானத் துறைகளும், இளை

விட்டு வளர்ந்து வருவது அங்கு தானே! உத்தியோகம் உடனே கிடைக்கா விட்டால் கூடப் பரவாயில்லை. வெற்றிலை பாக்குக் கடைவைத்தாவது காலத்தை ஓட்டலாம்! அதற்குக் கல்கத்தா நகரை விட வசதியானது வேறு எது? சேச்சே! இவ்வளவு நாட்களாக வீட்டில் வீணுக சோம்பேரித்தனமாக உட்கார்ந்திருந்தது எவ்வளவு முட்டாள் தனம். பல இடங்கள் செல்ல வேண்டும், அலையணும், ஆபீஸ், கடை, கம்பெனி, பள்ளி, கல்லூரி களெல்லாம் சலியாது ஏறி இறங்க வேண்டும், எப்படியும் வேலை கிடைத்து விடும். முயற்சியுடையார்தான் இகழ்ச்சி யடைய மாட்டார்களே! முயற்சி திருவினையாக்கும் என்பது அனுபவபூர்வமான உண்மையல்லவா?

மறுநாளே கல்கத்தா பிரயாணம் ஏற்பாடாகி விட்டது. வேறு வழியில்லாததால் எனது தகப்பனர் வைத்து விட்டுப்போன வெள்ளி ஹுக்காவை அடகு வைத்துப் பணம் வாங்கினேன். வெள்ளி ஹுக்கா என்றதும் இவன் பெரிய இடத்துப் பிள்ளையோ என்று எண்ணி விடாதீர்கள். எனது தகப்பனருக்கு டாம்பீகம் சற்று அதிகமாகவே பிடித்தஒன்று. பரம்பரையாகத் தேய்ந்துகொண்டு வந்த அந்தப் பூர்வீகச் சொத்தை விட்டு விட்டு இறந்து விட்டார். அவர் தன் நினைவுச் சின்னமாக விட்டுச் சென்றது இந்த ஹுக்கா ஒன்றுதான். கும்பிட்டுக் கூத்தாடி அதன்பேரில் கொஞ்சம் ரூபாய் பெற்றுக் கொண்டேன். இந்தத் தொகையோடு உத்தியோக வேலை தேட கிராமத்தை விட்டு கல்கத்தா வந்து சேர்ந்தேன்.

கல்கத்தாவை அடைந்த நான் தூரத்து உறவினர் ஒருவர் வீட்டில் தற்காலிகமாகத் தங்கினேன். அந்த உறவினர் பெயர் "விகாஸ் பாபு" அவர் எப்படி உறவு என்பதை என்னுலே கூட திட்டவட்டமாகக் கூற முடியாது. உறவு எபபடியோ நிச்சயம். அது எப்படியென்ருல், என் அம்மாவின் சின்ன மாமியாருடைய சகோதரியின் பிள்ளையினுடைய அத்தானுக்கு மாமா இந்த விகாஸ் பாபு. இவரை எந்த முறையில் அழைப்பது என்று எனக்குத் தெரியவில்லை கடைசியாக துணிச்சலுடன் "என்ன அண்ணு, என்னை ஞாபகம் இருக்கிறதா?" என்று சாதாரணமாகவே கேட்டேன்.

'அண்ணு'வுக்கு என்னை யாரென்று கண்டு பிடிப்பது இலகுவில் இயலாது என்பது நான் அறிந்ததுதான். அவர் என்னை முழித்துப் பார்த்தார். பின் சங்கோசத்தோடு அதிக வருடம் கழித்துப் பார்க்கிறதினுல் அடையாளம் தெரியவில்லை. நீங்கள் "பாஸ் படியா" கிராமத்திலிருந்து வருகிறீர்களோ?' என்ருர்.

நான் ஒரு புன் சிரிப்பை உதடுகளில் தவழ விட்டு விட்டு "சரிதான்! நீங்கள் மறந்தே விட்டீர்கள் "பாங்குடா" கிராமத்திலிருந்து வருகிறேன். நான் உங்களுக்கு எந்த வழியில் உறவு என்ருல்.." என்று ஆரம்பித்து என் தாயார் சொல்லித் தந்த வாய்ப்பாட்டை அப்படியே ஒப்புவித்தேன். கடைசியாக "நீங்கள் எங்கள் கேமந்த பாபுவினுடைய மாமா. புரிந்ததா" என்று சுருங்கப் பேசி விளங்க வைத்தேன். கூலியாளின் தலையிலிருந்த எனது துருப் பிடித்த பெட்டியை இறக்கி வைத்தேன். அதை அவர் வெறிக்கப் பார்த்துவிட்டு "என்ன! இங்கேயே தங்குவதாக எண்ணமோ" என்று சற்று உரக்கவே கேட்டார்.

நான் "அதிக நாள் இல்லை. நாலே நான்கு நாட்கள் தான். அப்புறம்..." என்று இடையே முடித்தேன்.

"சரி! சரி! அதனுல் என்ன? பரவாயில்லை" என்று ஒரு விதமாக முகத்தை வைத்துக் கொண்டு சம்மதத்தை அளித்தார் விகாஸ் பாபு,

சற்று நேரத்திற்குள் விகாஸ் பாபு அவசர அவசரமாகச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு எங்கோ கிளம்பிப் போய் விட்டார். தனியாக இருப்பது எனக்கே ஒரு மாதிரியாக இருந்தது. வீட்டுக் குழந்தைகள் சிறிது நேரம் கழித்ததும் என்னைச் சுற்றி ஆர்பாட்டத்தோடு விளையாடத் தொடங்கி விட்டன.

குழந்தைகளில் ஒன்று "எனக்கு லெமன் ஜூஸ் வேண்டும்" எனக் கேட்டது. அடுத்த ஒன்று "எனக்குப் பட்டம் மாத்திரம் வாங்கித்தா" என்றது. ஒரு பெண் உரிமையுடன் என் சட்டைப்பையில் கை விட்டுத் துழாவியது. மற்ருெருத்தி எனது வலது காதிலிருந்த மச்சம் ஒன்றைச் சுட்டிக் காட்டியும், தொட்டும் கேலி செய்தாள். பொழுதைக் கழிக்க இதைவிட வேறு என்ன தேவை? சிறுவர்களைத் தவிர

வேறு யாரும் இவ்வளவு சீக்[...]ரத்திற்குள் நெருங்கிப் பழ[...] மாட்டார்கள். அப்படியொ[...] நல்ல புத்தியை உடையவர்க[...] அவர்கள்.

பத்து வருடங்களுக்குப் பி[...] இப்போது தான் கல்கத்[...]விற்கு வந்திருக்கிறேன். அ[...]தச் சமயம் மேல் படிப்பிற்கா[...] வந்தேன்; இப்போதோ பிழை[...]பிற்கு! மூன்று நாட்களா[...] விட்டன-நான் வந்து. தெரு[...] தெருவாகச் சுற்றி வருகிறேன் தெரிந்தவர் ஒருவரைக் கூட[...] காணவில்லை. முன்னைய என[...] நண்பர்கள், கல்லூரிப் பேரா[...]ரியர்கள் மற்றும் தோழர்க[...] யாருமே இங்கு இருப்பதாக[...] தென்படவேயில்லை. நாங்கள் விளையாடும் இடத்தைத[...] போய்ப் பார்த்தேன். அங்கே[...] முடிசிங்காரம் செய்யும் கடை[...] இப்போது இருக்கக் கண்[...]டேன்.

கால்கள் வீங்க நடந்து[...] திரிந்து விட்டு வீடு திரும்பி[...]னேன். விகாஸ் பாபுவை காண்[...]கிற நேரம் மிகச் சிறிது. காலை[...]யில் சிறிது நேரம் சந்திக்கலாம் இரவு அதிக நேரம் போன பின்பு தான் வீட்டுக்கு வருகி[...]ருர். காலையில் எழுந்ததிலிருந்[...]தே பரபரப்புடன் தான் சகல[...] காரியங்களையும் கவனிக்கிருர். "நேரம் ஆகிறதே" என்று[...] வேளா வேளைக்கு உரத்தும் முணுமுணுத்தும் சொல்லிக்[...] கொள்வார். பல் விளக்கியதும்[...]டியோ, காப்பியோ அருந்தி[...] விட்டு பையை எடுத்துக்[...] கொண்டு காய்கறி வாங்கப்[...] புறப்பட்டு விடுவார். அங்கி[...]ருந்து வந்ததும் உடம்பில் எண்ணெயைத் தடவி குழா[...]யடியில் குளிக்க உட்கார்ந்து[...] கொள்வார். குளித்து முடியா[...]மலிருக்கும் போதே "ஏய்! என்ன செய்கிறே! நான் கூப்பி[...]டறது காதிலே விழுகிறதா? இலையை விரி! நேரமாகி[...] விடாம! மணி ஒன்பதே முக்[...]கால் ஆகி விட்டது! இம்! சீக்[...]கிரம் இலையைப் போடு" என்று[...] பட படத்துக் கொண்டு நிற்[...]பார் அவசரமாகச் சாப்பிட்டு[...] விட்டு இருந்த இடம் தெரியா[...]மல் எழுந்து விடுவார்! ஒரு நிமிடத்திற்குள் சட்டையை[...] மாட்டிக் கொண்டு புறப்படத்[...] தயாராகி விடுவார் இப்படிப்[...] பறந்துகொண்டலையும் மனித[...]ரிடம் பேசவோ அல்லது நாம் பேசுவதை அவர் கேட்கவோ[...] நேரம் ஏது?

உயர்ந்த பொறுப்புள்ள[...] நல்ல உத்தியோகத்தில் இருப்[...]பார். அதனுல்தான் இவ்வளவு[...] வேகமாகத் தன் வேலைகளை[...] முடித்துக்கொண்டு அலுவல[...]கத்திற்கு விரைகிருர் என்ற[...] எண்ணம் என் உள்ளத்திலே[...] ஏற்பட்டது. அதனுல் அவர்[...] மீது பொறுமைகூட எனக்கு[...] உண்டாயிற்று. "என்ன[...] மகிழ்ச்சியான வாழ்க்கை! பகல்[...] முழுதும் அலுவலகத்தில்[...] தொழில் நடத்துவது, உழை[...]த்துவிட்டு உற்சாகமாக வீடு[...] வருவது, இரவு நிம்மதியாக[...]

ரக்கம்" என்று நான் பொரு ிக்கொண்டேன். "தண்டச் சாற்றில் நானும்தான் இத் ;கைய உழைப்பாளரிடம் ந்து ஒண்டியிருக்கிறேனே! ிட்டிற்கோ இடைஞ்சல்! மிக்கோ பாரம்! சேச்சே! றனும் ஒரு மனிதனு! சோம் பரியாக வாழ்க்கையைப் ழாக்கிக் கொண்டிருக்கிறே ன!" இப்படி என் உள்ளம் ன்னையே ஏசிக்கொண்டது.

நான்காம் நாளும் பிறந்து ிட்டது. எனது மனமோ டபடத்துக்கொண்டது. சொன்ன தவணைப்படி இன்றே டைசி நாள்! இன்னும் இந்த ிட்டிலிருப்பது மரியாதைக் ;றைவு! இன்று 'விகாஸ்பாபு' டம் எப்படியும் நம் வறுமை லையை தெரிவித்துவிட வண்டியது தான்" எனத் தீர் ானம்செய்து கொண்டேன்.

அன்றும் அவர் வழக்கம் பாலவே அவசரஅவசரமாகப் றப்பட்டுக் கொண்டிருந்தார். ப்படியோ துணிச்சலை வரவ ழைத்துக்கொண்டு "அண்ணு! றனும் இன்று உங்களுடன் ருகிறேன்" என்றேன்!

என்ன! என்னுடன் வருகி யா? ஏன்?

ஒரு முக்கிய சமாச்சாரம் பேச வண்டும்,

"அப்படியா! நேரமாகிவிடாம! டனே புறப்படு. கொஞ்சம் ாமதமாகச் சென்ருலோ அக் ப் பாவிப்பயல் பூதம்போல் ந்து இருந்துவிடுகிருன். நேர ாகிவிடாம."

அவருக்கு முன்னே புறப் ட்டுத் தயாராக இருந்தேன். தருவைக் கடக்கும்வரைக்கும் ருவரும் மௌனமாகவே சன்ருேம்! கொஞ்சநேரம் ிந்ததும் விகாஸ்பாபுவே முக்கிய விஷயம் என்ருயே! ன்ன அது?" என்று கேட் ார்.

"வந்து......உங்.......நான்" ஒே என் வாய் குளறியது! தாண்டை அடைத்துக் காண்டது.

இதற்கிடையில் அவர், பேச ரம்பித்தார் "இந்தா கேளு! ாக் கிணம் என்னிடம் கடன் கேட்காதே! என்ருல் கொடுக்க டியாது! ஆமாம்! இப்போதே சால்லிவிட்டேன்" என்று ந்று கண்டிப்பாகவே பேசி ர்.

"பணமெல்லாம் எனக்கு வண்டாம்......எனக்கு.....சரி! ராமிலேஉட்கார்ந்துகொண்டு சால்லுகிறேனே" என்று ரன் திணறியவாறு பேச ரம்பித்தேன்.

"நான் டிராமிலே செல்லமாட் டேன். நடந்தேதான் செல் வன்."

சரி! அப்படியானுல் நானும் டந்து வருகிறேன். எவ்வளவு ரம் இருக்கும்?"

"ஈஸ்டர்ன் கார்டன்" போக வண்டும். எட்டி நட! வேக ாகப் போய்ச் சேரவேண்டும்" என்றவாறு வேகமாக நடந் தார்நானும்அவரைப்பின்பற்றிச் சென்றேன். "ஈஸ்டர்ன் கார் டன் பக்கத்தில்தான் நீங்கள் வேலை பார்க்கும் அலுவலகம் இருக்கிறதோ! அலுவலகத் தின் பெயர் என்ன" என்று நான் கேட்டுவிட்டு ஆர்வத் தோடு அவரது பதிலை எதிர் பார்த்தேன்!

"அலுவலகமா? அங்கேயா நான் வேலைபார்க்கிறேன்? யார் சொன்னது உனக்கு" "நீங்கள் என்ன பேசுகிறீர்கள்? ஒன்றும் புரியவில்லையே அண்ணு"

"நான் தினம்போவது அலு வலக வேலைக்கு என்று நினைத் துக்கொண்டிருக்கிருய்?"

"அப்படின்னு! நீங்கள் உத்தி யோகம் பார்க்கவில்லையா?"

ஐயோ! கூத்து! நான் எந்த அலுவலகத்திலும் வேலை பார்க்கவில்லை. தினந்தோறும் தப்பித்துக்கொள்வதற்காகவே ஓடிவருகிறேன்.

ஆச்சரியத்தால் வாயடைத் துப்போய் அப்படியே நின்று விட்டேன் நான்! பின் என்ன? உயர்ந்த உத்தியோகம் பார்ப்ப தாக அல்லவா நான் நினைத் துக்கொண்டிருந்தேன். அவர் என் கையைப்பற்றி இழுத்துக் கொண்டு நடந்தவாறே மேலும் பேச்சை ஆரம்பித்தார்.

"என் தந்தை கொஞ்சம் பண த்தை ரொக்கமாக நிலையான சேமிப்பாக வைத்துவிட்டுப் போயிருக்கிருர். அதிலிருந்து வட்டியாக மாதம் நாற்பது ரூபாய் கிடைக்கிறது. அதை வைத்துக்கொண்டுதான் என் குடும்பம் ஓடுகிறது. மூன்று ஆண்டுகளாக நானும் வேலைக் காகப் பகீரதப் பிரயத்தனங்க ளெல்லாம் செய்து பார்த்து விட்டேன். ஒன்றும் கிடைக்க வில்லை. எம். ஏ., யில் முதல் தர வகுப்பில் வெற்றி பெற்றி ருந்தும் பலன் என்ன...வேக மாய் நட! பிந்திவிட்டால் அப்பு றம் அந்தப் பாவிப்பயல் வந்து யமன்மாதிரி ஆக்கிரமித்துக் கொள்வான்."

விகாஸ்பாபுவின் பரபரப்பும், அவர் குறிப்பிடும் அந்தப் பாவிப்பயலும், என் மனத் திலே குழப்பத்தை உண்டாக் கிக்கொண்டிருந்தது. கொஞ்சம் வழி சென்றதும் அவராகவே பேச்சைஆரம்பித்தார். "இதை யெல்லாம் வீட்டுக்காரியிடம் சொல்லிவைக்காதே! சம்பள மில்லாமல் ஒரு பெரிய அலுவ லகத்தில் "அப்ரெண்டிஸாக" வேலை பார்க்கிறதாக என் மனை வியிடம் சொல்லிவைத்திருக்கி றேன். கொஞ்சநாட்கள் கழிந் ததும் சம்பளம் தருவார்கள் என்று கூறியிருக்கிறேன், நீ உண்மையை அம்பலப்படுத்தி விடாதே! இதனுல்தான் அவள் தினமும் தட்டாமல் என் சொல்படி கேட்டு, சமை யல் செய்துதருகிருள்."

ஏககாலத்தில் என் மனதில் பல உணர்ச்சி; அலைகள் எம்பிக் குதிக்கலாயிற்று. விகாஸ்பாபு விடம் நான் முன்பு கொண்டி ருந்த பொருமை பெருமை எல் லாம் மாறி அனுதாபம் கொள்ளலானேன். அவர் மீண்டும் பேச்சைத் தொடங்கி ஞர்:—

"தினமும் இப்படித்தான் தப்பித்துக்கொண்டு வருகி றேன். வீட்டில் குழந்தைக ளோடு ஒரு விநாடிகூட இருக்க முடிவதில்லை. எனக்குக் குழல் வாங்கித்தா, பழம் வாங்கித்தா, பக்கத்து வீட்டுப் பையன் போட்டிருப்பதுபோல் சட்டை தைத்துத்தா இப்படி ஓரே அமளி பண்ணிவிடுகிருர்கள். இதோடு சகதர்மிணி வேறு பட்டியலைத் தயார் செய்து காட்டுகிருள். என்ன செய்வது? இந்த உபத்திரவங்களினின் றும் தப்பித்துக்கொள்ளத் தான் இப்படி விழுந்தடித்து ஓடிவருகிறேன்!

இப்படி அவசரமாக எங்கே தினம் போகிறீர்கள்?

புன்னகையைச்சிந்தியவாறே அவர் சொன்னுர் "ஒருநாள் இரவு வீட்டிற்குத் திரும்பிய தும் சின்னப்பையன் தலையில் கட்டு கட்டப்பட்டிருந்தது. அது என்ன என்று விசாரித்த போது உயரேயிருந்து விழுந்து விட்டானும். அதனுல் மண்டை யில் அடி. ரத்தம் கொட்டிய தாம். அப்போது நான் இருந் திருந்தால் என்னை நடந்திருக் கும் தெரியுமா? டாக்டரை அழைத்துவாரும் என்று என்னை முடுக்கியிருப்பாள். மருந்துச் செலவிற்குப் பணத் திற்கு எங்குச் செல்வேன்? நான் இல்லாததால் நாட்டு வைத்தியம் செய்து அவளே சகலமும் பார்த்துக்கொண் டாள். அன்றைய தினத்தி லிருந்து மேலும் ஒரு மணி நேரம் இரவில் தாமதமாக வர ஆரம்பித்துவிட்டேன். இப் போது அந்தக் கவலை எப்படி யோ ஒழிந்துபோயிற்று"

பெருஞ்சாலையைக் கடக்க வேண்டியதிருந்தது. இருவ ரும் அக்கம்பக்கம் பார்த்துக் கொண்டே வேகமாக மறு பக் கத்தை அடைந்தோம்,

"தம்பி! சீக்கிரமாக வா! ஈஸ் டர்ன் கார்டனுக்குள் மரத்தடி யில் ஒரு பெஞ்சு இருக்கிறது. தினமும் அதிலே நீட்டிப் படுத் துத் தூங்கிவிடுவேன். பகல் பொழுது ஒரு வழியாகத் தொலையும். பின் கடைத்தெரு வைச் சுற்றிவிட்டு இரவு வெகு நேரம் ஆனதும் வீடு திரும்பு வேன். இதுதான் எனது உத் தியோகம்—வேலை! புரிந்ததா? கொஞ்சம் தாமதமாகிவிட்டால் அந்தப் பெஞ்சியின்மேல் இன் னொருவன் வந்து படுத்துவிடு கிருன். அதனுல் எனக்கு அன்று முழுவதும் ஓரே தர்ம சங்கடமாகிவிடும். ஆகையால் தான் அவனுக்கு முன்புவா ஓட்டோடியும்வருகிறேன். விளங் குகிறதா? சரி! சரி! நட! வேக மாக நடையைப் போடு..."

விகாஸ் பாபு கையை வீசிய வாறே வேகமாக நடந்தார்! நானும் பின்னுல் விரைந்து சென்றேன்.

ஈஸ்டர்ன்கார்டன் பெஞ்சியில் முன் சென்று இடம் பிடித்துக் கொள்ளவேண்டுமல்லவா?

[வங்க எழுத்தாளர் "வன பூல்" என்பவரின் படைப்பு இது! ஆங்கிலத்திலிருந்து தமிழில் தழுவலாகத் தரப்பட் டுள்ளது]

## மாவட்டத் தொடர்பு மாற்றம்.

சென்னை மாவட்ட தி. மு. கழகத்தின் நிர்வாகப் பொறுப்பில் இதுவரை இயங்கிவந்த கீழ்க்கண்ட ஆறு கிளைக் கழகங்கள், சென்னை—செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகங்களின் நிர்வாகிகள் உடன்பாட்டோடும், சம்பந்தப்பட்ட கிளைக் கழகங்களுக்கு முன்னரே அறிவித்துள்ளபடியும், 17—9—57-ம் நாள் முதல் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகத்தின் நிர்வாகப் பொறுப்புக்கு மாற்றப்படுகின்றன. இன்று முதற்கொண்டு கீழ்க்கண்ட ஆறு கிளைகளும் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகத்திற்கு உட்பட்ட கிளைகளாகப் பணியாற்றும்.

மாற்றப்படும் கிளைகள் :—

1. திருவொற்றியூர் தி. மு. க. கிளை
2. புழல் ,,
3. மாதவரம் ,,
4. கொடுங்கையூர் ,,
5. செங்குன்றம் ,,
6. ஆலந்தூர் ,,

"அறிவகம்"
சென்னை-13
19—9—'57.

தலைமைக்கழகம்,
தி. மு. க.

## அண்ணுமலை தந்த கருத்துச் சுடர்கள்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

துவதுடன், தமிழரின் உரிமைகளைப் பாதுகாத்திடத் தவறி வரும் சென்னை அரசினரின் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறது.

படாஸ்கர் அறிக்கையின் அடிப்படையில் திருத்தணிப் பகுதியைப் பெற்றுக்கொண்டு, அதே நேரத்தில் தமிழ்நாட்டிலிருந்து வேறு பகுதிகளை வெட்டாமலிருக்கும் முறையிலும், உரிமையை நிலைநாட்டத் தக்கவகையிலும், மக்களின் கருத்தை அறிந்து அதற்கேற்றபடி நடவடிக்கையில் ஈடுபடுமாறு சென்னை அரசினை இம் மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

முன்: க. அன்பழகன்
வழி: வி. பி. இராமன்
டி. கே. பொன்னுவேலு

### 10. நங்கவரம் அறப்போர்

திருச்சி மாவட்டம் குளித்தலை வட்டம் நங்கவரம் பகுதியில், அரசாங்கச் சட்டத்தில் காணப்பட்ட குறைபாடு காரணமாக பெரிய நிலப்பிரபுக்கள் இழைக்கவிருந்த கொடுமைகளை எதிர்த்து, உறுதியும் அமைதியும் குலையாத வகையில் அறப்போர் நடத்தி வெற்றிகண்ட உழவர் பெருங்குடி மக்களைப் பாராட்டுவதுடன், அந்த வட்ட உழவர் முன்னேற்றச் சங்கம் நடத்திய அறப்போரில் ஈடுபட்டவர்களில் 200 உழவர்கள்மீது 70-க்கு மேற்பட்ட வழக்குகளைப் போட்டிருப்பதில், குறிப்பிட்ட பிரச்சினையில் நிலச்சுவான்தாரர்களுக்கும் உழவர்களுக்கும் கடந்த 9-9-57-ந் தேதி உடன்பாடு ஏற்பட்டுவிட்ட படியால், அந்த வழக்குகளையெல்லாம் நிபந்தனையின்றி உடனடியாக அரசாங்கம் வாபஸ்பெற வேண்டுமாறு இம்மாநாடு சென்னை அரசியலாரைக் கேட்டுக்கொள்வதுடன், சட்டத்தில் காணப்படும்குறைபாடுகளை உடனடியாகத் திருத்தி, உழவர் பெருங்குடி மக்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு அளிக்க வேண்டுமென வற்புறுத்துகிறது.

முன்: குளித்தலை-முத்துகிருஷ்ணன்
வழி: திருச்சி - காமாட்சி

### 11. பீடித்தொழிலாளர்

தமிழ்நாடு முழுவதும் உள்ள பீடித் தொழிலாளர்களுக்குப் பாக்டரி சட்டப்படி உள்ள சலுகைகள் இன்றையத்தினம் கிடைக்கவில்லை; ஆகவே, மேற்படி சலுகைகளைப் பெற பீடித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று இம்மாநாடு சென்னை அரசாங்கத்தை வற்புறுத்துகிறது.

முன்: எம். எஸ். மணி
வழி: சிற்றுளி-சுப்பிரமணியம்
வேலூர் - தோழியர் தேசியமணி

### 12. சர்க்கரை ஆலை

சாத்தனூர் நீர்த்தேக்கம் வேலை முடிவடைந்து விட்டதாலும், பத்து இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கட்டிடங்கள் காலி செய்யப்பட்டிருப்பதாலும், கூட்டுறவு முறையில் சர்க்கரைத் தொழிற்சாலை ஒன்று அமைத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவாவது அகற்றவும் மாநில அரசியலாரை இம் மாநாடு வற்புறுத்துகிறது.

#### பாலாற்று நீர்

(அ) மைசூர் மாநில அரசியலாருடன் உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி, பாலாற்றுத் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வட ஆற்காடு மாவட்ட மக்களின் வாழ்வை வளப்படுத்த முனையுமாறு அரசிலாரை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

முன்: திருப்பத்தூர்-நெடுஞ்சோழன்
வழி: எஸ், முருகையன்

### 13. ஓராசிரியர் நிலைமை

பல்வேறு மாவட்டங்களில் ஓராசிரியர் பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தவர்கள் ஈராண்டுக் காலம் பயிற்சி பெற்றாக வேண்டும் என்பதற்காக வேலையற்ற நிலைமைக்கும், வாழ்க்கைநெருக்கடிக்கும் ஆளாக்கப்பட்டிருப்பதுகாண வருந்துவதுடன் அவர்களது நிலைமை சென்னை சட்டமன்றத்தில் எடுத்துரைக்கப்பட்டும் அரசியலார் அவர்கள் குறையைத் தீர்க்காததை இம்மாநாடு கண்டிக்கிறது.

முன்: பொற்செல்வி இளமுருகு
வழி: வி. என். ராமசாமி

### 14. பட்டுத் தொழிற்சாலை

குடியேற்றத்தில் மூடிக்கிடக்கும் தென்னிந்திய பட்டுத் தொழிற்சாலையை உடனடியாகத் திறந்து, அத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழைத் தொழிலாளர்களின் எஞ்சியுள்ள வாழ்வையாவது நிலைபெறச் செய்ய அரசியலாரை இம் மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

முன்: சம்பந்தம்
வழி: சாரங்கபாணி

### 15. நாடகக் குழு நிறுவு

திராவிட முன்னேற்றக் க இலட்சியக் கொள்கைகளை றார்ப் பகுதிகளில் பரப் தற்கு ஏற்ற வகையில் ப படும்படியான நாடகக் கு ஒன்றை நிறுவித் தரவேண் மென்று பொதுச்செயலாள இம்மாநாடு கேட்டுக் கொ றது.

முன்: பொன்-சொக்கலிங்க
வழி: வாணிதாசன்

# "எந்தப் பக்கம் இந்தி வந்துவிடும் எத்தனை பட்டாளம் கூட்டிவரும்?"

——(0)——

## தென்னாட்டின் கோபக் குரல்

——(0)——

திருவண்ணாமலையில் செப்-21ந் தேதி நடைபெற்ற வட ஆற்காடு மாவட் இந்தி எதிர்ப்பு மாநாட்டில், அறிஞர் அண்ணா அவர்கள் படிக்க, குழுமியிரு பல்லாயிரவர் பேரொலி செய்ய, நிறைவேற்றப் பட்ட இந்தி எதிர்ப்புத் மானம் :—

(அ) இந்தி அல்லாத மொழியினர் மீது—குறிப்பாகத் தெ ணாட்டின் மீது தபால்—தந்தி, இரயில்வே, புதிய நாண முறை, வானொலிச் செய்தி போன்றவைகளில் நேர்முகமா வும் மறைமுகமாகவும், இந்தியைத்திணித்து அரசியல் ஆதி கம் பெற எடுத்துக்கொண்டுவரும் பல்வேறு முயற்சிகளோ கூட, பிற மொழியினர்மீது அரசியல் ஆதிக்கம் செலுத் இந்திஏகாதிபத்தியத்தைஉருவாக்குவதற்காகக்கோர்கமிட் மூலம் மத்திய அரசாங்கமும், அதனை நடத்தும் காங்கிர கட்சியும் பயங்கரத் திட்டம் தீட்டியிருப்பது, தென்னாட்டுக் வரவிருக்கும் பேராபத்து என்பதை எடுத்துக்காட்டு துடன், அந்தப் பேராபத்தினின்றும் நம்நாடு தப்பி விடுத பெற எத்தகைய நியாயமான நடவடிக்கைகளில் ஈடுபடவு எல்லாவிதமான தியாகங்கள் புரியவும், தமிழர்கள் இன் முதலே தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டுமென் இந்த மாநாடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

(ஆ) மக்களின் கவனம் வேறு பக்கங்களில் ஈர்க்கப்பட்டிரு நேரத்தில் மக்களின் குறிக்கோளை எடுத்துக்காட்டத்த முறையில் அல்லாமல், மக்களின் நேரடி வாக்குகளைப் பெ மல், ஒரு கட்சியின் ஏதேச்சாதிகார முறையுடன் அமைக் பட்ட அரசியல் நிர்ணய சபையின் ஆதரவில் ஒரே ஒ ஒட்டு மெஜாரிட்டியில், அவசர அவசரமாகவும், பொறு பற்ற முறையிலும் நிறைவேற்றப்பட்ட மொழி சம்பந்தமா விதி, மக்களின் உண்மையான குறிக்கோளைக் காட்டு தாகாது என்பதாலும், அந்த விதி, இந்தியல்லாத பி மொழியாளர்களை அடிமைப்படுத்தப் பயன்படும் ஆதிக் கருவியாக இருப்பது தெளிவாகத் தெரிந்துவிட்டபடி லும், உடனடியாக அரசியல் சட்டத்திலிருந்து மொழி சம் தப்பட்ட அந்த விதி அகற்றப்பட வேண்டுமென்று இ மாநாடு மத்திய அரசை வற்புறுத்துகிறது.

(இ) தாய் மொழியில் ஆட்சித் துறை, நீதிமன்றத் துறை அ வல்களை வெற்றிகரமாக்குவதுடன், பிற மாநிலங்களுடனு உலகுடனும் தொடர்பு கொள்ள ஆங்கிலத்தை இப்போ போலப் பயன்படுத்திக்கொள்ளும் திட்டத்தை நீடிப்ப என்ற கருத்தினையும், இந்த மாநாடு ஆட்சியாளர்களு வலியுறுத்திக் கூறுகிறது.

(ஈ) இந்தி ஆதிக்கத்தை ஒழிப்பதற்காகத் தக்க திட்டம் தீ நடவடிக்கைகளை வகுத்திட பொதுச்செயலாளரை இ மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

...ழிக்க, தருக்கர்களின் தான் தோன்றித்தனத்தை மட்டந் ...ட்ட, "இளம்பிற்றுக் காண் ...மிழர் சிங்கக் கூட்டம், கிழித் ...தியத் தேடுதுகாண் பகைக் ...ட்டத்தை!" என தமிழகத் ...ர் திரளும் காட்சியை திரு ...ண்ணாமலை துவக்கிவிட்டது.

வடநாட்டிலிருந்து வீசும் இந்தி வாடையைத் தடுக்க அண்ணாமலை எழுந்து விட்டது!

வடநாட்டிலிருந்து வீசும் இந்தி வாடையைத் தடுக்க அண்ணாமலை—அண்ணாவின் மலை எழுந்து நிற்கிறது!

வடநாட்டிலிருந்து வீசும் இந்தி வாடையைத் தடுக்க அண்ணா மலை—அண்ணாவாகிய மலை நிற்கிறது!

## சேலம் தேர்தல் வழக்கு நிதி!

சேலம் தொகுதி தேர்தல் வழக்கை உயர் நீதி மன்றங்கள் வரை சென்று, சிறந்த வழக்கறிஞர்களைக்கொண்டு, சீரிய முறையில் நடத்த வேண்டி, கீழ்க்கண்டவர்கள் பெருந்தன்மையோடு நிதி தந்து உதவியுள்ளனர். அவர்களுக் கெல்லாம் என் மகிழ்ச்சியும் நன்றியும் வணக்கமும் உரியவாக! —இரா. நெடுஞ்செழியன்

20-8-57 காட்டுப் பாக்கம் பொதுக் கூட்டத்தில் உள்ளூர் தி. மு. கழகம் ரூ. 50-00

25-8-57 நெல்லைப் பொதுக் கூட்டத்தில் உண்டியல் வசூல் ரூ. 41-78

2-9-57 சென்னைப் பொதுக் கூட்டத்தில் 8-வது வட்ட மக்கள் மன்றம் ரூ. 15-00

7-9-57 விருதுநகர்ப் பொதுக் கூட்டத்தில்: நகர தி. மு. கழகம் ரூ. 10-00; எம். எஸ். சி. நாராயணசாமி ரூ. 6-00; செலார்பட்டி ராதாகிருஷ்ணன் ரூ. 2-00; விருதை எம் ஜி. ஆர். அனுதாபிகள் ரூ. 4-52; தனிப்பட்டவர்கள் படிப்பகங்கள் ரூ. 5-00.

8-9-57 இராசபாளையம் பொதுக் கூட்டத்தில்: நகர தி. மு. கழகம் ரூ. 81-00; சில்லரைகளாக ரூ. 1.50

10-9-57 காவேரி நகர்ப் பொதுக் கூட்டத்தில் சில்லரைகளாக ரூ. 5-00

13-9-57 பொதுக் கூட்டத்தில் இராயபுரம் கெ. பகுத்தறிவு மன்றம் ரூ. 30-00

17-9-57 பொதுக்கூட்டத்தில் சிந்தாதிரிப்பேட்டை தி. மு. கழகம் ரூ. 25-00; தமிழ் வளர்ச்சி மன்றம் ரூ. 5-00

அஞ்சல் மூலமும் நேரிலும்: பழனி சுவாமி சிவநேசம் ரூ. 2-00; மேலப்பாவூர் கணபதி ரூ. 5-00; கடையம் கனி ரூ. 5-00

திருமணத்தின் நினைவாக: சத்திரப்பட்டி மணமக்கள் டி. கே. கே. சாமி-அம்மச்சி ரூ. 10-00;

குழந்தைக்குப் பெயரிடுதல் நினைவாக இராசபாளையம் இராகவன் குழந்தை நெடுஞ்செழியன் ரூ. 1-00; சத்திரப்பட்டி குழந்தை இளங்கோவன் ரூ. 1-00; சேலம் பெரியப்பட்டி ஏ. கோவிந்தசாமியின் குழந்தை மணிமேகலை ரூ. 1-03 காவேரி நகர் குழந்தை செம்பியன் ரூ. 2-00;

### மன்றம் வளர்ச்சி நிதி

பழனி சாமி சிவநேசன் ரூ. 3-00

கரும்பு பயிரிடுவதில் ரூ. 100 பரிசு பெற்ற தெ. ஆ. மாவட்ட முன்னாள் தி. மு. க. செயலாளர் பால குரு சாமி ரூ. 2-00

நிதி அனுப்பவேண்டிய முகவரி :—

**இரா. நெடுஞ்செழியன்,**
93, பிராட்வே, சென்னை-1

தலைமைக்கழக அறிக்கை

## முதுகுளத்தூர் கலவரம்.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முதுகுளத்தூர், பரமக்குடி, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய வட்டாரங்களைச் சார்ந்த சிற்றூர்களில் இரு வகுப்புகளிடையே கலவரங்கள் மூண்டு கொலை—கொள்ளை—தீயிடுதல் போன்ற அக்கிரமங்கள் தாண்டவமாடவும், அவற்றின் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவதியுற்று ஊரைவிட்டே ஓடும்படியாகவும் நிலைமைகள் ஏற்பட்டிருப்பதைக் கண்டு துக்கமும் துயரமும் அடைகிறோம்.

சென்னை அரசியலார் முன்னெச்சரிக்கையாக காலா காலத்தில் தலையிட்டு தவறான வகுப்புணர்ச்சி தலைதூக்காமல் அமைதி நிலைநாட்ட முயன்றிருந்தால், இப்படிப்பட்ட கேடுகள் அங்கெல்லாம் மூண்டிருக்கா என்று அப்பகுதியில் உள்ளோர் கூறுகின்றனர். கலவரங்களினால் கொலைகள் ஏற்பட்டது போதாதென்று போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து மேலும் சிலரைச் சுட்டுத் தள்ளியிருப்பது வருந்தத்தக்கதோடு வன்மையாகக் கண்டிக்கத் தக்கதுமாகும். அற வழியில் அமைதியை நிலைநாட்ட முயலுவதுதான் பொறுப்புள்ள சர்க்காரின் முக்கிய கடமையாகும். இனியேனும் முதலமைச்சரும், பிற அமைச்சர்களும் நிலைமைகளை நேரில் சென்று கண்டறிந்து தக்க நடவடிக்கைகளை எடுத்து உடனடியாக அமைதியை நிலைநாட்டுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கலவரம் மூண்டுள்ள பகுதிகளில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும், கழக ஆதரவாளர்களும், பொதுமக்களும் அமைதியை நிலைநாட்டுவதற்கான எல்லா முயற்சிகளையும் கடைப்பிடிக்குமாறு இதன் மூலம் வேண்டிக்கொள்கிறோம்.

20-9-57
'அறிவகம்'
சென்னை-13

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. க.

இந்தி வாடையைத் தடுக்கிட, அண்ணாமலை மாநாடு தீர்மானித்து விட்டது.

இந்திவாடைக்குத் தடையாக அண்ணா மலை—அண்ணாவாகிய மலை நிற்கிறது! அண்ணா அவர்கள் தென்னகத்தைக் காக்கும் மலைபோல நிற்கிறார். குலகிரிகள் அசைந்தாலும் அசையாத குணத்தான், குன்றனையக் கொள்கை வீரன்! மலையிலிருந்து, புன்னகை அவிழ்வதைப் போல அருவி தவழ்ந்து வருவதைக் காணலாம், அதே மலையிலிருந்து மற்றோரிடத்தில் பெரும் பாறைகள் உருண்டு விழுவதைப் பார்க்கலாம்! அருவி விழ்வதைப்போல, புன்னகையுடன் கூடிய இனிய தமிழ் நடையை அண்ணாவிடம் கேட்கலாம்; எதிரிகள் கோபமூட்டினால், பாறைகள் உருண்டு விழுவதைப் போன்று எதிர்த்தவர்களின் மண்டைக் கர்வம் உடையும் வகையில், கனல் தெறிக்கும் எச்சரிக்கைகளையும் அவரிடம் கேட்கலாம்! மலைச் சாரலில் கோல மயில் ஆடிடும் அழகைக் காணலாம், மேலே அடர்ந்த காடுகளில் சென்றால் வேங்கை பாய்ந்து வருவது தெரியும்! அமைதியான நேரத்தில் அண்ணாவின் பேச்சு ஆடிடும் கலாப மயில், போராட்டக் காலங்களில் அவரது பேச்சு எதிரிகள் மீது பாய்ந்து செல்லும் வேங்கை! மலையிலே நல்ல வழியில் வருகிறவர்களுக்கு குளிர்ந்த சுனைநீர் உண்டு, காட்டு வழியில் கள்ளத்தனமாக வர முயன்றால் காட்டுத் தீ தடுத்து நிறுத்தும்! அந்த மலையில் தென்றல் உண்டு, புயலும் உண்டு! மலர் உண்டு, சுற்றிலும் முட்களும் உண்டு!

அண்ணா(வாகிய) மலை தென்னாட்டவர்க்கு ஆர்த்திடும் இசையருவி, ஆடிடும் கோலமயில், அறிவு வேட்கையைத் தீர்த்திடும் சுனைநீர், நட்பை வீசிடும் தென்றல், பண்பைப் பரப்பிடும் நறுமலர்! அதேசமயம் வடநாட்டவர்க்கு, உருண்டு வரும் பாறை, பாய்ந்துவரும் வேங்கை, பரவி விடும் காட்டுத்தீ, வீசி வரும் புயல்; குத்திக் காட்டும் முள்!

21, 22 தேதிகளில் திருவண்ணாமலையில் கூடினோம். அந்த இரண்டு நாட்களிலும் அறிஞர் அண்ணாவும், மற்ற முன்னணி வீரர்களும் தந்த கருத்துரைகளைக் கேட்டோம்.

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து, வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போர்ப்பறை கேட்கிறது! போர்க்கொடி உயர்கிறது!

களம் அழைக்கிறது, கழகம் அழைக்கிறது, தயாராகுங்கள் தோழர்களே!

"மன்றம்" அச்சகத்தில் (93, பிராட்வே, சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன், எம். ஏ.—(தொலை பேசி எண்: 55697